janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 செப்டம்பர் 04 - 10 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 22




சட்டத்தையும், தேசத்தையும் **பாதுகாப்போம்**

தேச விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மையைத் தூக்கியெறிவது



ப 03

வாழ்விலும், சாவிலும் வதைக்கும் **ஜி.எஸ்.டி.**

"இந்திய நாட்டு மக்கள் 130 கோடியில் 80 கோடி மக்கள் ஏழைகள் ". பிரதமர் மோடியும், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் 2020ல் >>>



ப 06

உச்சநீதிமன்றத்தில் அம்பலப்பட்டுப் போன **மோடி அரசு!**

பெகாசஸ் உளவு உறுதியான ஆதாரம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட குழு அறிவித்துவிட்டது. அதே நேரத்தில் >>>



ப 05

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளைக் கண்டித்து

## மாநில மாநாட்டு அறைகூவலை ஏற்று தமிழகம் முழுவதும்

# மறியல் போராட்டம்



## 25 ஆயிரம் பேர் பங்கேற்பு




**பாஜக ஒன்றிய அரசின் பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான கொள்கைகளால், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களின் விலைகளும் நாள்தோறும் அதிகரித்து வருகிறது. கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலை யிழப்புக்கு ஆளாகியுள்ளனர். லட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரம் இழந்து நிற்கின்றன.**

இந்த நிலையில் மின்சார சட்டத்திருத்தம் மூலம் மின் விநியோகத்தை தனியாரிடம் விடுவது, மின் கட்டணச் சலுகைகளை ரத்து செய்வது, மானியங்களை வெட்டிவிடுவது, இலவச திட்டங்களை அவமதித்து அழித்தொழிப்பது என்ற மக்கள் விரோத நடவடிக்கையில் ஒன்றிய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இவற்றைக் கண்டித்தும், கழுத்தை முறிக்கும் செலவுச் சுமைகளை தாங்கி நிற்கும் மக்களிடம் வீட்டு வரி உயர்வு, சொத்துவரி உயர்வு, மின் கட்டண உயர்வு உள்ளிட்ட மாநில அரசின் நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் மாநில அளவிலான போராட்டத்திற்கு மாநில மாநாடு அறைகூவல் விடுத்தது. இந்த அறைகூவலை ஏற்று தமிழ்நாடு முழுவதும் 150க்கும் மேற்பட்ட மையங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆக. 30 அன்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது. இந்த மறியல் போராட்டத்தில் மாநிலம் முழுவதும் சுமார் 25 ஆயிரம் பேர் கைதாகியுள்ளனர். பல இடங்களில் மறியல் தொண்டர்களை காவல்துறை யினர் கைது செய்யாமல், திருப்பி அனுப்பியுள்ளனர். மக்கள் துயரங்களை வெளிப்படுத்தும் போராட்டத்தின் உணர்வை மதித்து பாஜக ஒன்றிய அரசு தனது மக்கள் விரோத நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என வலியுறுத்துவதுடன் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆதரவு காட்டியவர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சாா்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

**சென்னை :** சென்னை மாவட்டக் குழுக்கள் சார்பாக நடைபெற்ற மறியலுக்கு தேசியக்குழு உறுப்பினர்

தொடர்ச்சி 14ம் பக்கம் >>






# ஹிட்லரின் புதிய வார்ப்புகள்

**பேரன்புமிக்க தோழர்களே!**

**பாசிசத்தை கொள்கையாகக் கொண்டவர்கள் வரலாற்றில் என்ன கதிக்கு ஆளானார்கள் என்ற பேருண்மையை சிலர் வசதியாக மறந்து விடுகின்றனர்.**

பாசிசக் கொள்கை என்பது மிக, மிக கொடூரமானது. எந்த நாடும் மக்களும் ஏற்க முடியாத, மனித சிந்தனையை சிதைக்கும் வெறி பிடித்த கொள்கையாகும்.

மனித சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவை மட்டுமே, தங்கள் இனமே உயர்ந்தது, நாங்களே, ஆளப்பிறந்தவர்கள், அறிவாளிகள் என்ற இறுமாப்பு கொண்டவர்கள். இதே திசை வழியில் செயல்பட்டு மனித வடிவில் வாழும் மிருகமாக மாறிப் போவார்கள்.

படிப்பில் ஆர்வமற்ற, ஓவியம் வரைந்து அதில் கிடைத்த சொற்ப தொகை கொண்டு வாழ்க்கை நடத்திய சாதாரண மனிதன் தான் அடலாப் ஹிட்லர். அவரிடம் இருந்த பேச்சாற்றல் மூலம் ஜெர்மானிய மக்களை தன் வசமாக்குவதில் வல்லமையை வெளிப்படுத்தி வந்தார்.

அவனது கவர்ச்சிகர தோற்றமும், அலங்கார ஆடையும், வண்ணமயமான மேடையும், உடல் மொழியுடன் சேர்ந்த பேச்சாற்லும் ஹிட்லரை ஜெர்மானிய மக்களின் தலைவர் நிலைக்கு உயர்த்தியது.

1921ஆம் ஆண்டில் ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் சேர்ந்து தனக்கு கிடைத்த வாய்ப்பை தன் இன மக்களின் உயர்விற்காக பாடுபடுவதாக கூறி மற்ற பிரிவு மக்களுக்கு எதிரான வன்மத்தை விதைத்து, ஒரு பிரிவுக்கு எதிராக மற்றொரு பிரிவு மக்கள் மோதிக்கொள்ளும் கலவர சூழலை ஏற்படுத்தினார்.

மோதலின் மூலம் குளிர் காய்ந்தான் ஹிட்லர். கட்சியின் பெயரை நாஜி கட்சியாக மாற்றி அதன் தலைவராக உயர்ந்தார்.

தன் நாட்டிற்கு தலைவனாக இருந்தால் மட்டும் போதுமா? உலகில் வேறு எவருக்கும் இல்லாத அறிவும், ஆற்றலும் தனக்கும், தன் இனத்திற்கும் நிரம்ப இருக்கின்ற காரணத்தால் இவ்வுலகையே கட்டி ஆளவேண்டும். தான் விரித்துப் பிடிக்கும் அதிகாரக் குடையின் கீழ் உலகம் சுழல வேண்டுமென்ற பேராசை வெறியோடு, தன்னை ஆதரித்த அப்பாவி மக்களுக்கும் விஷத்தை ஊட்டி வளர்த்தான். தன்னை காட்டிலும் ஆகச் சிறந்த தேச பக்தன் எவனுமில்லை என்று அனைவரையும் ஏற்க செய்தான்.

தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கை களுக்கும், தேசபக்த சாயம் பூசினான்.

ஜெர்மானிய மக்கள் தங்களுக்கு அரிதினும் அரிதான தலைவன் ஹிட்லர் என நம்பினர். அவன் 'வாய்ச்சவடால்' பேச்சுக்கு அடி பணிந்தனர்.

நமது நாட்டு தேசத் துரோகிகள் 'யூதர்கள்' என்றான்.

* நமது நாட்டு தேசத் துரோகிகள் 'கம்யூனிஸ்ட்டுகள்' என்றான்.

* ஹிட்லர் கூறியதை மக்கள் நம்பினார்கள் ஏற்றார்கள்.

பாசிசத்தின் முதல் எதிரி கம்யூனிஸ்ட்டுகள் என்பதனை நன்கறிந்தவன் ஹிட்லர். தனது திட்டங்களுக்கு, கொள் கைகளுக்கு எதிராக சமரசமின்றி போராடுபவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்பதனை நன்கறிந்தவன் ஹிட்லர்.

அதனால் கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத ஜெர்மனி என்றான்; ஜெர்மனி மட்டுமல்ல. கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத உலகம் என்றான். கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத உலகத்தை உருவாக்குவேன்; அதன் தலைவனாக இவ்வுலகை கட்டி ஆள்வேன் என்று கொக்கரித்தான்.

யுத்த வெறியோடு அலைந்தான். அது இரண்டாம் உலகப் போராக வெடித்தது.

தனது இன வெறி கொண்ட படையை சோவியத் யூனியன் நோக்கி திருப்பி விட்டான். அவனது முட்டாள் தனமான உத்தரவை ஏற்று அப்படையும் முரட்டுத்தனமாக முன்னேறியது.

இரண்டாம் உலகப் போரின் முடிவுகள் என்னானது என்பதனை உலகறியும். சோவியத் மக்களும் செஞ் சேனையும் ஹிட்லரின் பாசிசப் படையை தோற்கடித்து புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். எந்த ஜெர்மனியிலிருந்து படை புறப்பட்டதோ அந்த நாட்டிலும் உள்நுழைந்த செஞ் சேனை ரீச்ஸ்டாக் என்கிற ஜெர்மன் நாடாளுமன்றத்தில் செங்கொடி ஏற்றி திரும்பியது.

ஹிட்லரின் ஸ்வஸ்திக் சின்னம் பொறிக்கப்பட்ட பாசிசக் கொடி வெட்டி சாய்க்கப்பட்டது.

செங்கொடி வானளாவ பட்டொளி வீசிப் பறந்தது.

செங்கொடி ஜெர்மனியில் மட்டுமல்ல பல நாடுகளிலும் பறந்தது ஆட்சி அதிகாரத்திலும் இருந்தது.

பாசிசம் அழிந்தது உலகையே ஆட்டிப் படைக்க துடித்திட்ட பாசிசம் வேரோடும், வேரடி மண்ணோடும் அகற்றப்பட்டது.

பாசிசப் போரால் பல்லாயிரம் மக்கள் உயிர் இழந் தனர். சோவியத் ஒன்றியத்தின் இரண்டரைக் கோடி மக்கள் பாசிச எதிர்ப்புப் போரில் தங்கள் இன்னுயிர் கொடுத்துள்ளனர்.

பாசிசத்தை அழிக்க செஞ்சேனை செய்திட்ட தியாகம் எண்ணில் அடங்கா! இன்னுயிர் தந்து பாசிசத்தை அழித்த செஞ்சேனையின் அளப்பரிய தியாகம் இம்மண்ணுலகம் இருக்கும் வரை மறையாது, மங்காது, மங்காத வான் சுடராய் பிரகாசிக்கும்.

செஞ்சேனை கொடுத்திட்ட விலை மதிக்க முடியாத தியாகத்தால் இந்தியா போன்ற நாடுகள் காலனி ஆதிக்கத்தின் பிடியில் இருந்து விடுபட்டது. அடிமைச் சங்கலிகள் அறுபட்டு நொறுங்கின.

சுதந்திரக் காற்றை நாம் சுவாசிக்கின்றோம் என்றால், அது செஞ்சேனையின் தியாகம் அல்லவா? அவர்கள் சிந்திய இரத்தம் அல்லவா?

உலகை ஆட்டிப் படைத்து உலகையே கட்டியாள வேண்டும் என்று இனவெறித் தலைவன் ஹிட்லரின் கதி என்னவானது என்பதனை மீண்டும் மீண்டும் நினைவூட்டிக் கொள்ள வேண்டியவர்கள் நாம் அல்ல, ஹிட்லரை பின்பற்றுபவர்கள் உணர வேண்டும்!

உலகத்தை ஆட்டிப் படைக்க வேண்டுமென்று விரும்பி யவன், தனது செல்வக் குழந்தைகளை கொன்றான். தனது அன்பு மனைவியை சுட்டுக் கொன்றான். பின்னர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு அழிந்து போனான்.

அவனது நடவடிக்கைகள் அனைத்திற்கும் துணை நின்ற கோயபல்சும் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான்.

இத்தகைய வரலாற்று பேருண்மையை அறியாத, அல்லது அறிந்தும் உணராத, உண்மைகளை வெறுக்கும், வரலாற்றை திரிக்கும் அல்லது மறைக்கும் காவிக் கூட்டம் "கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியா" என்று முழங்கி வருகிறது.

சிரிப்புத்தான் வருகின்றது கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியாவாம்!

இந்தியா இல்லாமல் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் இல்லை, இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியாவும் இல்லை.

கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியாவை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது.

நாட்டின் வரலாற்றை, உண்மையான வரலாற்றை கூர்ந்து நோக்கினால் கம்யூனிஸ்ட்டுகளின் அர்ப்பணிப் பையும் பங்களிப்பையும் உணர முடியும்.

நாட்டின் விடுதலையை பரிபூரண விடுதலை என்ற முழக்கத்தை முன்வைத்தவர்கள் அதற்காக போராடியவர்கள், அதில் வெற்றியும் கண்டவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்பதை வரலாற்று ஏடுகள் எடுத்துக் கூறுகின்றன.

பரிபூரண விடுதலை என்ற முழக்கமிட்டது மட்டுமல்ல அதனை நடைமுறைப்படுத்தி, வெற்றிவாகை சூடிட தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட செம்மலர்கள் கம்யூனிஸ்ட்டுகள்.

நாட்டில் உள்ள அனைத்து சிறைச் சாலைகளில் உள்ள ஒவ்வொரு கருங்கல்லும், அதன் ஜன்னல் கம்பிகளும் கம்யூனிஸ்ட்டுகளின் தியாகத்தை எடுத்துரைக்கும்.

நாட்டில் உள்ள காடுகள், மலைகள், குன்றுகள் அனைத்தும் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமறைவு வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறும்.

நாட்டில் உள்ள அனைத்து தூக்குமேடைகளையும் இன்முகத்தோடு முத்தமிட்டவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்பதனை தூக்கு மேடைகள் வரலாறு கூறும்.

**துப்பாக்கிகளும், அதில் நிரப்பப்பட்ட தோட்டாக்களும் கம்யூனிஸ்ட்டுகளின் முதுகை அல்ல மார்பை பிளந்தன என்பதனை எடுத்துக் கூறும்.**

**இவைகளை எல்லாம் அறியாத அரை வேக்காடுகளே சங்பரிவார் கும்பல்.**

மீரட் சதி வழக்கு தெரியுமா? மாவீரன் பகத்சிங் அவரது தோழர்கள் ராஜகுரு, சுகதேவ், ஷோகன் சிங் ஜோஷ், அஜாய்குமார் கோஷ் இவர்களைத் தெரியுமா?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழார்ந்த பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி "மகாத்மாவிற்கு தேசப் பிதா" எனப் பெயர் சூட்டியவர் என்பதை சங்பரிவார் அறியுமா?

சிட்காங் வீராங்கனை கல்பனாவை அறிவாயா?

எஸ்.ஏ.டாங்கே, சி.ராஜேஸ்வரராவ், பி.டி.ரணதிவே, ரவி நாராயணரெட்டி இவர்களை அறிவாயா? அவர்களது தியாகத்தை அறிவாயா? சிந்தனை சிற்பி சிங்காரவேலரைத் தெரியுமா? அவரது தியாகம் புரியுமா?

தலைமை செயலகத்தில் கோட்டை கொத்தளத்தில் வானாளவ உயர்ந்து நிற்கும், கொடிக் கம்பத்தில் பறந்த வெள்ளையர்களின் கொயை இறக்கி விட்டு முதன் முதலாக மூவர்ணக் கொடியை பட்டொளி விசிப் பறக்க விட்ட சேரன் குளம் ஆரியா என்கிற பாஷ்யத்தை அறிவாயா?

அவர் வரைந்திட்ட பாரதியாரின் படம்தான் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அரசு அலுவலகங்கள் கல்வி நிலையங்கள் அனைத்திலும் இன்றும் அலங்கரித்து கொண்டுள்ளது என்பதனை அறிவாயா? அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதும், சென்னை மாநகர கட்சியின் செயலாளர் என்பதும் அறிவாயா?

இலண்டன் மாநகர் சென்று ஆட்சித் தலைவர் பணிக்கு (ஐ.சி.எஸ்) கல்வி கற்ற சி.எஸ்.சுப்பிரமணியத்தை

தொடர்ச்சி 5ம் பக்கம் >>



- டி.ராஜா

# அரசியலமைப்புச் சட்டத்தையும் தேசத்தையும் பாதுகாப்போம்

**தேச விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மையைத் தூக்கியெறிவது மற்றும் நம் தேசத்துக்கான ஒரு வளமான வருங்காலம் குறித்து சிந்திப்பது ஆகிய இரண்டு நோக்கங்களும் நமது நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டத்தில் பின்னிப் பிணைந்து இருந்தன.**




வருங்கால இந்திய குடியரசை வடிவமைத்திட, சீர்திருத்த வாதிகள், அரசியல் தலைவர்கள், சித்தாந்தவாதிகள், எழுத்தாளர்கள் மற்றும் புரட்சியாளர்கள் ஆகியோரின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மையப்புள்ளியில் சங்கமித்துக் கொண்டிருந்தன. இறுதியாக, 75 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷாரிடம் இருந்து நாம் விடுதலை அடைந்தபோது, பிரிட்டிஷாரின் மோசமான ஆட்சியின் கீழ் ஆதரவற்ற ஏழைகளாகப் பீடிக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான மக்களின் அபிலாஷைகளுக்கு ஒரு தெளிவான வடிவத்தை வழங்கிட நாம் முயன்றோம்.

தேசப் பிரிவினை ஏற்படுத்திய கொடூரமான விளைவுகள் நமது சிந்தையில் நிலைகொண்டிருந்தது. மத அடிப்படையிலான அணிதிரட்டலின் விளைவுகள் குறித்து தலைவர்களும், வெகுமக்களும் ஒத்த கருத்து கொண்டிருந்தனர். மத அடிப்படையிலான அணிதிரட்டல், பொதுநலம் குறித்த பார்வையற்றவர்களாகப் பொதுமக்களை மாற்றியது.

காலத்தின் தேவையை உணர்ந்து, வெகுமக்களின் விருப்பங்களையும், நமது விடுதலைப் போராட்ட இயக்கத்தின் இலட்சியங்களையும், நமது அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்திட டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் சீரிய தலைமையின் கீழ், நமது அரசியல் நிர்ணய சபை முயன்றது.

சுமார் மூன்றாண்டு கால கடின உழைப்புக்குப் பின், 1949ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையின் (Preamble) மூலமாக இந்தியாவை ஒரு இறையாண்மைமிக்க ஜனநாயக குடியரசாகக் கட்டமைப்பதற்கான நமது உறுதிப்பாட்டை நாம் பிரகடனப்படுத்தினோம். சுதந்திர இந்தியாவில் வருங்கால தலைமுறையினர் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காகப் போராடி இன்னுயிர் ஈந்த லட்சக்கணக்கான மக்களின் செங்குருதியை, நமது அரசியலமைப்பின் இலட்சியங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

நமது அரசியலமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடித்து வரும் மெய்கோள்களில் (Premise) இருந்து, கடந்த 8 ஆண்டுகளில், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிற்கு பின்னோக்கிய நகர்வு ஏற்பட்டிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். அனைத்து மதப் பிரிவுகளிடமிருந்தும் அரசு சமதொலைவில் விலகி நிற்பதான ஒரு மதச்சார்பற்ற அரசியலமைப்புக்கான கட்டமைப்பை நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கியது. சிறுபான்மையினரைப் பாதுகாத்திடவும், அனைத்து தரப்பு மக்களும் நியாயமான முறையில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய மதச்சார்பற்ற கட்டமைப்பு இன்று திட்டமிட்டு தகர்க்கப்பட்டு வருகிறது.

ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு அரசின் அதிகாரப்பூர்வ மதம் எனும் சிறப்பு நிலையை வழங்கி அந்த மதத்தை உயர்த்திடுவதற்காக அனைத்துவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதமர் உள்ளிட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் உயர் பொறுப்புகளை வகிக்கும் அரசாங்கத்தின் மூத்த பிரமுகர்கள் மதச்சடங்குகளில் பங்கேற்று வருகிறார்கள்.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டுமானத்தின் அடிக்கல் நாட்டு விழா, காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தின் தொடக்க நிகழ்வு ஆகியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். நிலைமை மேலும் மோசமாகி, அரசு நிகழ்ச்சிகளுக்கு கூட, பெரும்பான்மை மதத்தின் சடங்கு மற்றும் சம்பிரதாயங்களின் சாயல் கொடுக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் போதும், அந்தக் கட்டடத்தின் உச்சத்தில் தேசியச் சின்னத்தைப் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைத்த போதும் அத்தகைய சாயல் கொடுக்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான இதுபோன்ற நடவடிக் க்ஷைகளை ஒரு பிரிவினர் போற்றிக் கொண்டாடி வருகிறார்கள். எனினும், இதுபோன்ற அரசு நிகழ்ச்சிகள் சிறுபான்மை சமூகத்தவரின் சம்பிரதாயங்களை ஒத்திருந்தால், ஒருவேளை, அந்தக் கூட்டத்தார் சினம் கொண்டு எழுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

இந்த முயற்சிகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவை அனைத்தும் நமது மதச்சார்பற்ற ஜனநாயக அரசியலமைப்பைத் தூக்கியெறிந்துவிட்டு, ஆர்.எஸ்.எஸ்ன் சமூகப் படிநிலைகள் கொண்ட இந்து தேசியத்தை நிறுவிட வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு தீட்டப்பெற்ற சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த முயற்சிகள் யாவும் புதியவையன்று. ஆனால், தற்போது இந்த முயற்சிகள் வீரியத்துடன் மேற்கொள்ளப்படுவது, அவற்றுக்கான 'அரசின் ஆதரவைத்' தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

சிறுபான்மையினர் மற்றும் விளிம்புநிலை மக்களின் பாதுகாப்பு, மதச்ச்சார்பின்மை, சமத்துவம் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தை ஆர்.எஸ்.எஸ் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. தொடக்கத்திலிருந்தே, அவர்கள் ஜனநாயக கட்டமைப்பை எதிர்த்து வந்தனர் என்பதோடு பிரிட்டிஷாருக்கு ஆதரவாக உறுதிபூண்டு நின்றனர். அரசியலமைப்புச் சட்டத்தை அவர்கள் இகழ்ந்துரைப்பதும் புதியதன்று.

அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையில் பாஜக முதல் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்திட, ஒரு குழுவை அமைக்க விருப்பம் கொண்டது, ஆனால், அப்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனின் கடுமையான எதிர்வினை காரணமாக, அந்த முயற்சியில் இருந்து பின்வாங்க நேரிட்டது. ஆர்.எஸ்.எஸ்-ன் முன்னாள் பிரச்சாரகரான நரேந்திர மோடியின் ஆட்சியில், இந்து தேசத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றிட, மிகுந்த செயல்முனைப்புடன், அனைத்து வழிகளிலும் முயன்று வருகிறார்கள்.

அண்மையில், இந்து மதத் தலைவர்களின் கூட்டமொன்று வாரணாசியில் நடைபெற்றது. இந்து தேசம் ஸ்தாபிக்கப்பட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வரைவை இந்தக் கூட்டம் தயாரித்தது. இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து அவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சபை பரிந்துரைத்தது. புதுடெல்லிக்குப் பதிலாக வாரணாசியைத் தலைநகரமாக அறிவிக்க வேண்டும்; சாதியமுறை சட்டபூர்வமாக்கப்பட வேண்டும்; பாகுபாடுகள் மற்றும் சமூகப் படிநிலைகள் ஆகியவை அந்த வரைவின் ஒரு பகுதியாகும்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான இதுபோன்ற முன்மொழிவுகள் குறித்து அரசாங்கம் கடைப்பிடிக்கும் 'மவுனம்' நம்மைத் திகைப்படையச் செய்கிறது. வாரணாசி நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, விருப்பு வெறுப்பின்றி, அச்ச உணர்வின்றி, அரசியலமைப்புச் சட்டத்தின்படி மக்கள் நலனுக்காக கடமையாற்றுவேன் என்று பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்ட பிரதமரும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான இதுபோன்ற முன்மொழிவுகள் குறித்து மவுனமாக இருப்பது நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது.

**ஏற்றுக்கொண்ட பதவிப் பிரமாணத்திற்கு முற்றிலும் முரணான இந்த அலட்சியப் போக்கு, இந்துத்துவ சக்திகளுக்கு அரசாங்கம் உடந்தையாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அரசாங்கம் மற்றும் பாஜகவின் இந்த திட்டமிட்ட மவுனம் இது போன்ற நிகழ்வுகளை இங்கொன்றும் அங்கொன்றுமாக எங்கோ நடக்கும் எதேச்சையான சம்பவங்கள் என்று அரசாங்கத் தரப்பிலிருந்து அறிவிக்கச் செய்யக்கூடும் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. ஆனால், இதுபோன்ற ஒவ்வொரு நிகழ்வின் போதும், குடிமக்கள் இவற்றை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும்.**

நமது அரசியலமைப்புச் சட்டம், மதச்சார்பற்ற ஜனநாயக கட்டமைப்புடன், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிற்கு, மக்கள்நல நோக்குநிலையையும் கொண்டு விளங்கியது. வறுமை மற்றும் நோய் ஆகியவற்றிலிருந்து குடிமக்கள் விடுதலையடைந்து, ஒட்டுமொத்த மேம்பாடு காண, அத்தியாவசியமான வசதிகளை அவர்களுக்கு வழங்கிட அரசின் தலையீடு அவசியம் என்று கருதப்பட்டது. அப்போது தான் சமவாய்ப்பு மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமை ஆகியவற்றை அடைய முடியும்.

இவ்வாறாக, அரசியலமைப்புச் சட்டம், அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் வழங்கியதோடு மட்டுமின்றி, வருங்கால அரசாங்கங்கள் கொள்கைத் திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கு உதவிகரமாக 'அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளையும்' வழங்கியுள்ளது. தேசம் மற்றும் மக்களின் ஒட்டுமொத்த நலன்களை உறுதிப்படுத்திடவே இதுபோன்ற வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.

"சட்டங்களை இயற்றும் போது இந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பொருத்திப் பார்க்க வேண்டியது அரசின் கடமையாகும்" என்று அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி 4ல் உள்ள ஷரத்து 37 பிரகடனப்படுத்துகிறது. தேசத்தின் நிர்வாக ஆளுகைக்கு இந்த வழிகாட்டு நெறிமுறைகள் அடிப்படையானவை என்று அரசியலமைப்புச் சட்டத்தின் சிற்பிகள் கருதினர்.

இத்தகைய கோட்பாடுகளில் இருந்து குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிற்கு பின்னோக்கிய நகர்வு ஏற்பட்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. கட்டற்றுப் பெருகி வரும் தனியார்மயம், சமத்துவமின்மை, வேலைவாய்ப்பின்மை, சமூக பாதுகாப்பின்மை, பசி இவை அனைத்தும் மோடி ஆட்சிக்காலத்தின் முத்திரைகள் ஆகும். அறிவியல் மற்றும் விவாத மனப்பான்மை வலதுசாரி சக்திகளால் நொறுக்கப்படுகின்றன. நாடாளுமன்றம் கூட குறைமதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற தாக்குதல்களை எதிர்கொண்டு வரும் நேரத்தில், அரசியலமைப்புச் சட்டத்தின் மதச்சார்பற்ற ஜனநாயக சமத்துவ கட்டமைப்பைப் பாதுகாப்பது மற்றும் மக்களின் பொதுவான பொருளாதார மேம்பாட்டுக்காகப் போராடுவது ஆகியவையே நமது இரட்டை நோக்கங்கள் ஆகும். நமது அரசியலமைப்புச் சட்டத்தைச் சீர்குலைத்திட மற்றும் விடுதலைப் போராட்ட இயக்கத்தின் பாரம்பரியத்தை மறுவரையறை செய்திடுவதற்கான முயற்சிகள் அனைத்து வழிகளிலும் மேற்கொள்ளப்படுவதை நாம் பார்க்கிறோம்.

அவற்றை முறியடிப்பதற்கான நமது எதிர்த் தாக்குதல் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், தத்துவ ரீதியாக வெகுமக்களின் பிரச்சனைகளை எழுப்புவதாகவும் இருந்திட வேண்டும். ஒரு தத்துவார்த்த போராட்டத்தின் மூலமாக வலதுசாரி சக்திகளை முறியடிப்பதற்கான வரலாற்றுக் கடமை இடதுசாரிகளுக்கு இருக்கிறது. அத்தகையதொரு தத்துவார்த்த போராட்டமானது, தேச விடுதலைக்கான தியாகத்தின் பெருமைமிகு பாரம்பரியம், மதச்சார்பின்மை மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் மேம்பாடு குறித்த சீரான உறுதிப்பாடு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு கட்டமைக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான கடும் தாக்குதலுக்கு எதிராக நாம் சமத்துவ பதாகையை உயர்த்திப் பிடிப்போம். தேசத்திற்காகவும், மக்களுக்காகவும் அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் உறுதிப்பாட்டுடன் தொண்டாற்றும் நாம், அரசியலமைப்புச் சட்டத்தையும் தேசத்தையும் பாதுகாத்திட வேண்டும்.

தமிழில் – **அருண் அசோகன்**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 22

## பாவம் அந்த புல் புல் பறவைகள்

கர்நாடக மாநிலத்தில், எட்டாம் வகுப்பு பாட புத்தகத்தில் ‘‘சாவர்க்கர் சிறையில் அடைக்கப்பட்ட அறையில், ஒரு சிறிய சாவித் துவாரம் கூட இல்லை. இருப்பினும், புல்புல் பறவைகள் எங்கிருந்தோ அறைக்கு வரும். சாவர்க்கர் ஒவ்வோர் நாளும் தாய்நாட்டிற்குச் செல்ல அந்த பறவைகளின் இறக்கைகளில் அமர்ந்து பறந்து செல்வார்,’’ என்று அந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புல்புல் பறவைகள் என்பவை நம் சிட்டுக்குருவிகளை விட சிறியவை. ‘‘அது எப்படி சாவித்துவார அளவுக்கு கூட ஓட்டை இல்லாத சிறை அறைக்குள் வரும்! அதில் ஏறி சாவர்க்கர் பறந்து செல்வார்?‘‘ என்று குழந்தைகள் கேட்க மாட்டார்களா?

அதை ஒரு உருவகமாக சொல்லி இருக்கிறோம் என்று ஏதோ சமாளிக்கிறார்கள்.

எப்படியோ, ஆர்எஸ்எஸ்ஸுக்கு இந்திய மக்களிடம் சாவர்க்கரை முன்னிலைப் படுத்த வேண்டும். காந்தியை கொன்ற இந்த ஆளின் பெயரை, முடிந்து போன பழைய தலைமுறையிடம் சொல்லியிருந்தால், காரி உமிழ்வார்கள். மூன்றாவது தலைமுறை என்பதால் மெல்ல நூல் விடுகிறார்கள்.

இரண்டு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 1911 ஜூலை 11ம் தேதி அந்தமானுக்கு சாவர்க்கர் அனுப்பப்பட்டார். அதற்குள் பொறுக்கவில்லை, ஆகஸ்ட் 29ஆம் தேதி தனது முதல் மன்னிப்புக் கடிதத்தை எழுதினார்.

அவரது இரண்டாவது மன்னிப்பு கடிதம் 1913 நவம்பர் 14ல் எழுதப்பட்டது. ‘‘அரசாங்கம் சொல்லும் எந்த வகையிலும் நான் பணிபுரியத் தயாராக இருக்கிறேன். (பிரிட்டிஷ்) அரசாங்கத்தின் தாயுள்ளம் கொண்ட கதவுகளிடம் திரும்பி திரும்பி வருவதைத் தவிர இந்த ஊதாரி பிள்ளையால் வேறு என்ன செய்ய முடியும்‘ என்று அவர் எழுதியிருந்தார். எப்பேர்ப்பட்ட புரட்சிக்காரன்!!

1921 ஏப்ரல் 18ஆம் தேதி அவரது ஆறாவது மன்னிப்புக் கடிதம் எழுதப்பட்டது. 1924ல் எரவாடா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். 50 ஆண்டுகள் தண்டனை பெற்ற அவர், சிறை இருந்தது 9 ஆண்டு 10 மாதங்கள் மட்டுமே. அவருக்கு மாதம் 60 ரூபாய் ஓய்வூதியம் பிரிட்டிஷ் அரசு தந்தது. எதற்காக அந்த ஊதியம் தரப்பட்டது என்பதற்கு இதுவரை விடை இல்லை. வேறு யாருக்கும் இவ்வாறு ஓய்வூதியம் தரப்பட்டதில்லை.

அந்தமானில் அவரோடு சேர்த்து 80 ஆயிரம் பேர் இருந்தார்கள். 173 பேர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் கடும் சித்திரவதைகளுக்கு ஆளாயினர். ஆனால் ஒருவர் கூட இப்படிக் கேவலமாக மண்டி போட்டு மன்னிப்புக் கேட்டதில்லை.

அந்தமானில் சிறைக்கு செல்லும் போது இவரது உடல் எடை 112 பவுண்டு இருந்ததாம். வெளியே வரும்போது 146 பவுண்டாக பெருத்திருக்கிறார். அவரோடு சிறையில் இருந்தவர்கள், சிறை அதிகாரிகளை எதிர்த்துப் பேசுமாறு தம்மைத் தூண்டிவிட்டுவிட்டு, சண்டை நடக்கும் போது சாவர்க்கர் அமைதியாக ஒதுங்கிக் கொள்வார் என்று சொல்லி இருக்கிறார்கள். காட்டி கொடுத்து சலுகை பெறுவது ரத்தத்திலேயே ஓடி இருக்கிறது!


வெளியே வந்த பின்பு ‘சித்திரகுப்தா’ என்ற புனை பெயரில் தன்னை பற்றி தானே வரலாறு எழுதி, தனக்குத்தானே வெட்கமில்லாமல் ‘வீர சாவர்க்கர்’ என பெயர் சூட்டிக்கொண்ட ஆள் இவர்!

பிரிட்டிஷ்காரனிடம் சம்பளம் பெற்று இவர் எழுதியது தான் இந்துத்துவா கொள்கை. ‘‘கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் நாட்டைப் புனிதமான கருதுவது இல்லை; அவர்கள் இங்கு வாழத் தகுதியற்றவர்கள்’’ என்று எழுதி மக்களை பிரித்து வைத்து பிரிட்டிஷ் காரன் ஆள்வதற்கு வழி செய்தவர். அதையே அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை ஆர்.எஸ்.எஸ். ஆண்டு வருகிறது. மண்டியிட்ட இந்த ஆளை, மாவீரன் போல பிஞ்சு நெஞ்சங்களில் புகுத்துவதற்கு, பாடப் புத்தகத்தில் கதை சொல்கிறது.

ஒரு பக்கம் இந்தப் பிரச்சனையைப் பேச வைத்துக் கொண்டே, மறுபக்கம் 10ஆம் வகுப்பு புத்தகத்தில் இருந்த பகத்சிங் குறித்த பாடத்தை எடுத்துவிட்டு, ஆர்எஸ்எஸ் நிறுவனர் ஹெட்கேவார் கட்டுரை சேர்க்கப்பட்டது. 10ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் ஸ்ரீநாராயணகுரு, பெரியார், திப்பு சுல்தான் பற்றிய பாடங்களும் நீக்கப்பட்டுள்ளன.

மன்னிப்பு கடிதம் எழுதியதற்கு ஆதாரமே இல்லை என்று ஒரு பக்கம் ஒன்றிய அரசு சொல்கிறது. மகாத்மா காந்தி சொல்லித்தான் மன்னிப்பு கடிதம் எழுதினார் என்று அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்னொரு பக்கம் ரீல் சுற்றுகிறார். காந்தியின் கடிதத்தை புல் புல் பறவை தான் கொண்டு போய் சாவர்க்கரிடம் கொடுத்தது என்றும் கதை சொல்வார்கள்.

பொய்யில் பிறந்து, பொய்யிலேயே வளர்ந்த பொய்யர்கள்.



- பிரபாகரன்

## கண்டுகொள்ளுமா? தமிழிசைமேல் அக்கறை கொண்ட தமிழக அரசு!



தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளை | சீர்காழி அருணாசலக் கவிராயர் | சீர்காழி முத்துத்தாண்டவர்

**தொன்மையான தமிழ் மொழியின் சிறப்பை உலகெங்கும் கொண்டு சேர்த்த பெருமைமிக்க தமிழிசை மூவர்களுக்கு ஆண்டுதோறும் ஆணி மூல நட்சத்திரத்தில் நடத்தப்படும் மூவர் விழா திமுக அரசு பொறுப்பேற்று இதுவரை நடத்தாதது தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.**

**தமிழிசை மூவர்கள்:** சீர்காழியில் பிறந்து வாழ்ந்து உலகெங்கும் தமிழிசையை வளர்த்த தமிழிசை மூவர்களான முத்து தாண்டவர், அருணாச்சல கவிராயர், மாரிமுத்தா பிள்ளை, ஆகிய மூவரும் காலத்தால் முற்பட்டவர்கள். தமிழுக்கு தமது இசை யின் மூலம் பல்வேறு தொண்டுகளை புரிந்து தொன்மையான தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்த பெருமை இம்மூவரையும் சாரும்.

**மூவருக்கும் மணிமண்டபம்:** சீர்காழியில் தமிழிசை மூவர்களுக்கு ஆரம்ப காலகட்டத்தில் தமிழ் ஆர்வலர்கள் மற்றும் அரசு இணைந்து எளிமையான முறையில் விழா நடத்தப்பட்டு வந்தது.

தமிழிசை மூவர்களின் பெருமையை உணர்ந்த அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் சீர்காழி நகரின் மையப் பகுதியில் மூவர்களுக்கு மணிமண்டபம் கட்ட ஒரு கோடியே 51 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மூவர்களின் உருவத்தை வெண்கல சிலையாக மணி மண்டபத்தின் வாயிலில் நிர்மாணிக்கச் செய்தார் அது மட்டுமல்லாது மண்டபத்தின் முகப்பில் பண்ணும் பரதமும் என்ற சிற்பக்கலை நயத்துடன் கூடிய சிலைகளையும் கலைஞரின் நேரடி பார்வைக்கு பின்னரே அற்புதமாக வடிவமைக்கப்பட்டது.

கலைஞரின் கனவு திட்டத்தில் ஒன்றான தமிழிசை மூவர் மணிமண்டபம் கட்டுமான பணியின் போது அப்போதைய திமுக செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அமைச்சராக இருந்த பரிதி இளம்வழுதி வாரத்திற்கு ஒருமுறை மணிமண்டபத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அவ்வப்போது தகவல்களை முதல்வர் கலைஞரிடம் தெரிவித்து வந்தார்.

இப்படியாக திமுக தலைவர் கலைஞரின் நேரடி கவனத்தில் முழுமை பெற்ற மூவர் மண்டபம் அவரது ஆட்சி காலத்தில் திறக்க முடியாமல் போனது தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த 2013 ஆம் ஆண்டு காணொளி காட்சி மூலம் தமிழிசை மூவர் மணிமண்டபத்தை திறந்து வைத்து மூன்று நாட்கள் விழா கொண்டாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒரு சில ஆண்டுகளே பெயரளவுக்கு விழா நடத்தப்பட்டதாக தமிழ் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த 2015–16ஆம் ஆண்டுகளில் ஆணி மூல நட்சத்திரத்தில் நடைபெற வேண்டிய விழா நடைபெறாமல் போனதற்கு அரசு சார்பில் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டாலும், அதனை தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் நாடு முழுவதும் ஏற்பட்ட பெரும் கொரோனா தொற்று காரணமாகவும் ,ஆர்வம் இல்லாத அரசின் செயல்பாடுகளாலும் விழா முற்றிலுமாகவே தடைபட்டுள்ளது.

**மரங்களால் மறைக்கப்பட்ட மணிமண்டபம்:** சீர்காழி தென்பாதி மெயின் ரோட்டில் மேற்கு நோக்கி பிரம்மாண்டமாக அமைந்துள்ள மூவர் மணி மண்டபம் தற்பொழுது மணிமண்டபத்தையே மறைக்கும் அளவிற்கு மரம் செடிகள் வண்டி முற்றிலும் பராமரிப்பின்றி காணப்படுகிறது. தவிர மணிமாற புறாக்களின் கூடாரமாக விளங்கும் மணிமண்டபம் உட்புறங்களிலும் மேல் தளத்திலும் சிதலங்கள் ஏற்பட்டு சீரமைக்கப்படாமல் உள்ளன.

சமீபத்தில் மூவர் மணிமண்டபத்தை ஆய்வு செய்த மாவட்ட கலெக்டர் நிதி ஒதுக்கீடு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததோடு சரி, அதற்கான எந்தவித வேலைபாடுகளும் நடக்கவில்லை என தமிழ் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**மூவரை கண்டுகொள்ளாத திமுக அரசு**

தமிழிசை மூவர்களுக்கு மணிமண்டபம் எழுப்புவதில் மறைந்த முதல்வர் கலைஞருக்கு இருந்த ஆர்வம் தற்போதைய முதல்வருக்கு இல்லையோ என்ற எண்ணம் தோன்றுவதாக வருத்தம் தெரிவிக்கும் தமிழிசை ஆர்வலர்கள் திமுக ஆட்சி பொறுப்பேற்று 15 மாத காலங்களுக்கு மேலாகியும் இது நாள் வரை திமுக அரசால் தமிழிசை மூவர் விழா குறித்த காலத்தில் அதாவது முத்து தாண்டவர் முக்தியடைந்த ஆணி மூல நட்சத்திரத்தில் நடைபெறவில்லை, விழா நடத்துவதற்கான முகாந்திரமும் தெரியவில்லை, ஏனென்று மக்களுக்கும் புரியவில்லை ,இதை தெளிவு படுத்த வேண்டிய அரசு அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை.

மணிமண்டபத்தை கட்டமைப்பதில் கலைஞர் காட்டிய ஆர்வம் சீர்காழி நகருக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்துக்கு எழுப்பிய மணிமண்டபமாக கருதப்படும் சூழ்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏன் இந்த தமிழிசை மூவர்களை மறந்தார் என்ற கேள்வி அனைவர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

இனியாவது தமிழிசை மூவர்களின் விழாவை திமுக அரசு திறம்பட கொண்டாட வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளை திமுக அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையில் பயணிப்பதாக தமிழிசை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்புக்கு: **63806 77313**

## மிக்கைல் கோர்பச்சேவ் மறைவு

### தேசிய செயற்குழு இரங்கல்



மிக்கைல் கோர்பச்சேவ் மறைவையொட்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் அதிபரும், சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான மிக்கைல் கோர்பச்சேவ் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது. சில காலமாகவே நோயுற்றிருந்த 91 வயதுடைய மிக்கைல் கோர்பச்சேவ் கடந்த ஆகஸ்ட் 30, 2022 அன்று இயற்கை எய்தினார். அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளது.



# உச்சநீதி மன்றத்தில் அம்பலப்பட்டுப் போன மோடி அரசு!

- காசி விஸ்வநாதன்



**பெகாசஸ் உளவு உறுதியான ஆதாரம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட குழு அறிவித்துவிட்டது. அதே நேரத்தில் ஒன்றிய அரசு தங்களுக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்றும் பதிவு செய்துள்ளது. எதையோ மறைக்க வேண்டிய அவசியம் ஒன்றிய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.**

இஸ்ரேலைச் சேர்ந்த என்எஸ்ஓ என்கிற நிறுவனம் உருவாக்கிய மென்பொருளை பயன்படுத்தி இந்தியாவில் எதிர்க் கட்சியினர், சமூக ஆர்வலர்கள், பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்ட 300 அறிதிறன் செல்பேசிகள் ஒட்டுக் கேட்கப் படுவதாக எடிட்டர்ஸ் கில்ட் பத்திரிக்கையாளர்கள் என்.ராம், சசிகுமார் உள்ளிட்டோர் உட்பட 12 பொதுநல மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

சுதந்திரமான விசாரணை நடத்த ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி ஆர்.வி.ஏ. ரவீந்திரன் கண்காணிப்பின் கீழ் தொழில்நுட்ப நிபுணர்கள் நவீன்குமார் சௌதரி, பி. பிரபாகரன், அஸ்வின் அனில் குமாஸ்தே ஆகியோர் கொண்ட குழு 2021 அக்டோபரில் அமைக்கப்பட்டது. பல முயற்சி களை மேற்கொண்டு ஆய்வுகளை நடத்திய இக்குழு தனது அறிக்கையை தலைமை நீதிபதி எஸ்.வி. ரமணா மற்றும் நீதிபதிகள் சூரியகாந்த், ஹிமா கோலி ஆகியோர் கொண்ட அமர்வு முன்பு தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கை பற்றி நீதிபதிகள் “ நிபுணர் குழுவிடம் ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 29 அறிதிறன் பேசிகளில் ஐந்தில் மட்டுமே ‘சிலவகையான தீங்கு விளைவிக்கக்கூடிய மென் பொருள்கள்’ இருந்ததாகவும் அவை பெகாஸ் மென் பொருள் மூலம்தான் உருவானவை என்று அறுதியிட்டுக் கூற முடியாது என்றும், அதே வேளையில் விசாரணைக்கு மத்திய அரசு போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

மேலும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் வேதனையோடு குறிப்பிட்ட வார்த்தைகள் மிகவும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை. “ நீதிமன்ற விசாரணையின் போது நடந்து கொண்டவாறே நிபுணர் குழுவிடமும் மத்திய அரசு நடந்து கொண்டுள்ளது” அதாவது விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

நீதிக்கு முன் அனைவரும் சமம் என்பது கேலிக்கூத்தாக ஒன்றிய பாஜக அரசால் மாற்றப்பட்டு வருகிறது.

பெக்காசஸ் என்ற ஸ்பைவேர் ரகசிய மென்பொருளாகும். இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. என்ற நிறுவனம் தயாரித்துள்ள மென்பொருள் பெகாசஸ் உளவு அறிவதற்காக பயன்படுத்தக்கூடியது. இந்த மென்பொருள் அரசுகளுக்கு மட்டுமே விற்கப்படுவதாக சொல்லப்படுகிறது. இந்திய அரசிய லமைப்புச் சட்டம் இந்திய நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட உத்திரவாதம் செய் துள்ளது. இதனை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ளது.

எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமை காப்பாளர்கள் என அனைவருடைய குற்றச் சாட்டும் இந்திய ஒன்றிய அரசு பெகாசஸ் மென்பொருளை வாங்கி பயன்படுத்துகிறது என்பதாகும். ஒன்றிய அமைச்ச ரவையில் உள்ள ஒரு சிலரும் கூட உளவு பார்க்கப் படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்த பொழுது பாரதிய ஜனதா மறுத்தது.

இந்த மென்பொருளின் மூலமாக ஐபோன் மற்றும் ஆண்ட்ராய்டு போன் வைத்திருப்பவர்களை தொலைவி லிருந்தே முழுமையாக கண்காணிக்க முடியும்.

செல்போனில் உள்ள மெசேஜ்கள், புகைப்படங்கள், மின்னஞ் சல், செல்பேசி வைத்திருப்பவர் எங்கெல்லாம் செல்லுகிறார், யாருடன் எல்லாம் பேசுகிறார் என்பதையெல்லாம் சுலபமாக தொலைவிலிருந்தே கண்காணிக்கலாம். அவர்களுடைய அத்தனை தகவல்களையும் திருடலாம். ஹேக் செய்யலாம். மறையாக்கம் (Encrypted) செய்யப்பட்ட செய்திகளை கூட இந்த மென்பொருள் மூலமாக திருட முடியும்.

கண்காணிக்க படுபவர் யாராக இருந்தாலும் அவருடைய செல்லில் இவர்கள் நுழைந்து இன்ஸ்டால் செய்து கொள்ளும் வசதியும் உண்டு. போனின் முழுக் கட்டுப்பாட்டையும் பெகாசஸ் மூலம் உளவுத்துறை எடுத்துக்கொள்ளும். தனி மனித சுதந்திரம், பாதுகாப்பு என்பது இல்லாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நுனி முதல் அடி வரை பாதுகாப்பு என்பது இல்லாது போய் வவிட்டது. யார் மீதும் தாக்குதல் நடத்தவோ அவர்களை கண்காணிக்கவோ மிக எளிதான துப்பறியும் பணியை இந்த மென்பொருள் செய்கிறது. இவ்வாறு திருடப்பட்ட தகவல்கள் 60 நாட்களுக்குள்ளாக தானே அழித்துக் கொள்ளும் திறனும் இந்த மென்பொருளுக்கு உண்டு.

2016 ஆம் ஆண்டு ஐக்கிய அரசு அமீரகம் மனித உரிமை செயற்பாட்டாளர் அகமது மன்சூர் பெகாசஷின் உளவுகளை அம்பலப்படுத்தினார்.

2018 அக்டோபர் மாதம் சௌதி பத்திரிக்கையாளர் ஜமால் கசோக்ஜி துருக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகம் முன்பு படுகொலை செய்யப்பட்டார். அவருடைய தொலைபேசியை ஆய்வு நடத்திய போது அவருடைய நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டது தெரியவந்தது.

2017 ஆம் ஆண்டே மெக்சிகோ அரசு மீது பெகாசஸ் உளவு மென்பொருள் மூலம் கண்காணிப்பை நடத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. பேஸ்புக் போலவே காட்சியளித்து செய்திகளை திருடுவதை மதர் போர்டு செய்தி நிறுவனம் அம்பலப்படுத்தியது. 2019 ஆம் ஆண்டு என்.எஸ்.ஓ. நிறுவ னத்தின் மீது ஃபேஸ்புக் வழக்கும் தொடுத்தது. இதனை மறுத்த இஸ்ரேல் என்.எஸ்.ஓ. நிறுவனம் தாங்கள் “பாலியல் கொடுமைகளை தடுக்கவும், போதை மருந்து கடத்தலை தடுக்கவும், கடத்தப்பட்ட குழந்தைகளை கண்டறியவும், கட்டிட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கவும், பயங்கரவாதக் குற்றங்களைத் தடுக்கவும், உயிர்காக்கும் பணிகளிலேயே ஈடுபட்டிருப்பதாக விளக்கம் கொடுத்தது.

**உண்மையில் தனி நபர்களால் பயன்படுத்தப்பட முடியாத மென்பொருளை தயாரித்து அதனை அரசுக்கு மட்டுமே விற்பதாக சொல்லுகின்ற என்.எஸ்.ஓ. அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கின்ற பெகாசஸ் மென் பொருளை உளவுக்கு மட்டுமே அரசுகளிடம் விற்கிறது.**

இந்திய ஒன்றிய அரசு பெகாசஸ் மென்பொருளை வாங்க வில்லை என்பதை உச்சநீதிமன்றத்தில் நிரூபிப்பதில் என்ன தயக்கம்? இவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசாங்கம் வாங்கி இருக்கின்றார்கள் என்பதனால்தான் உச்சநீதிமன்றத்திற்கு வருவதிலும், கண்காணிப்பு குழுவிற்கு ஒத்துழைப்பு தருவ திலும் ஓடி ஒளிந்தார்கள். உண்மை வெளிப்பட்டு விடுமோ என்று அச்சநிலையில் உள்ளார்கள்.

எனவேதான் நீதித்துறையை மதிக்கத் தவறி உள்ளார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளது போல “ நாட்டு மக்களின் தனியுரிமையை காப்பதற்கும், இணையவழி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தற்போது உள்ள சட்டங் களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டவிரோத கண்காணிப்பு தொடர்பாக குடிமக்கள் முறை யிடுவதற்கு ஒரு அமைப்பு முறையாக உருவாக்கப்பட வேண்டும்”

ஒன்றிய அரசு ஒத்துழைப்பு தராத இந்த ஆய்வறிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும். விசாரணைக்கு மத்திய அரசு போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதை ஆணித்தரமாக பதியவேண்டும். “நீதிமன்ற விசாரணையின் போது நடந்து கொண்ட ஒரு நிபுணர் குழு விடமும் நடந்து கொண்டுள்ளது” நீதிபதிகள் குறிப்பிட்ட அடிப்படையில் கண்காணிப்புக் குழுவை விரிவாக்கம் செய்து தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு அம்பலப்படுத்த வேண்டும்.

ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ஜனநாயக அமைப்புகளின் உரிமைகளை பாதுகாப்பது அவசியம். ஜனநாயகத்தை வலுவிழக்க செய்வதற்கான பெகாசஸ் மென்பொருளை ஒன்றிய அரசு பயன்படுத்தியுள்ளது என்பது அம்பல பட்டுள்ளது. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க தொடர்ந்து போராடுவதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

தொடர்புக்கு: **94435 27486**




>> 02ம் பக்கத் தொடர்ச்சி

தெரியுமா? அண்ணல் காந்தியடிகளை அழைத்து, இலண்டன் மாநகரிலும் சென்னையிலும் கூட்டம் நடத்தியவர் என்பதை அறிவாயா? இவரோடு இணைந்து பணியாற்றி தொழிலாளிவர்க்கத்தின் தலைவராக உயர்ந்த தோழர்.பி.ராமமூர்த்தி வரலாறு தெரியுமா?

கன்னட மாநிலத்தில் பிறந்து, சென்னைக்கு வந்து படிப்பை பாதியில் விட்டு, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று தமிழ்நாட்டில் விவசாயிகள் பேரியக்கத்தை தொடங்கிய தோழர்.பி.சீனிவாசராவை தெரியுமா?

இலக்கிய பேராசான், விடுதலைப் போராட்ட வீரர், காந்தியடிகளால் தேசத்தின் சொத்து என போற்றப்பட்ட ஜீவாவை தெரியுமா?

நெல்லை சதி வழக்கு தெரியுமா? அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்ற விடுதலைப் போரில் பங்கேற்ற, பாலதண்டாயுதத்தை தெரியுமா? அல்லது மாசில்லா மாணிக்கம் ப.மாணிக்கத்தை தெரியுமா? அட மர மண்டைகளே இப்போதும் நம்முடன் வாழும் மூத்த தலைவர்கள் என்.சங்கரய்யா, இரா.நல்லகண்ணு இவர்களை கேட்டறிந்து கொள்ளுங்கள்.

எதனையும் அறியாத, அறிய முற்படாத மூட முண்டங்களே நீங்களா கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியாவை காணப் போகின்றீர்கள்.

கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத நாடு அல்ல உலகம் இல்லை.

பரந்து, விரிந்து கிடக்கும் கடலில் செல்லும் படகுகளில் கப்பலில் செங்கொடி பறந்து செல்கின்றது.

உருண்டையான உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளிலும் செங்கொடி பறந்து கொண்டு இருக்கின்றது.

ஏன் விண்வெளியில் கூட அரிவாள் சுத்தியல் பொறிக்கப்பட்ட செங்கொடி கம்பீரமாக காட்சியளித்து வருகிறது. இந்திய வகைப்பட்ட ‘ஹிட்லர்’ என நினைத்துக் கொண்டு கம்யூனிஸ்ட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்க கனவு காணும் கயவர்களே

ஹிட்லருக்கு ஏற்பட்ட அதோ கதியை கவனத்தில் கொள்ளுங்கள். கம்யூனிஸ்ட்டுகளின் ரோமங்களை கூட உங்களால் அசைக்க முடியாது அசைக்க நினைத்தால் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதனை . கூறத் தேவையில்லை. நேரமும் காலமும் கூடி வரும்போது உணர்வாய் உணர்த்தப்படுவாய்!

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்**

**தோழமைமிக்க,**

**(இரா.முத்தரசன்)**

**மாநிலச் செயலாளர்**



- ஆர்.கிருஷ்ணமூர்த்தி
(ஆர்.கே.)

# வாழ்விலும், சாவிலும் வதைக்கும் ஜி.எஸ்.டி.




**“இந்திய நாட்டு மக்கள் 130 கோடியில் 80 கோடி மக்கள் ஏழைகள் “. பிரதமர் மோடியும், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் 2020ல் ஏழைகள் நல்வாழ்வு உணவுத் திட்டத்தை நீட்டிப்பதாக அறிவித்தபோது இப்படிச் சொன்னார்கள். பல ஆய்வுக் குழுக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அதாவது ஏழைகளிலும் ஏழையாக வாழும் மக்கள் எண்ணிக்கை 30 சதத்திற்கும் மேல் என்று கூறியுள்ளன.**

ஆனால் உண்மை நிலை இந்த எண்ணிக்கையை விட மேல் என்பதை அரசும் அறியும் நாமும் அறிவோம்.

இப்படிப்பட்ட சொல்ல முடியாத துயரங்களோடு அன்றாடங் காய்ச்சிகளாக நாளும் செத்துப் பிழைத்து வாழ்ந்து வரும் மக்கள் மீதுதான் ஜி.எஸ்.டி. வரியைப் போட்டுள்ளது ஒன்றிய மோடி அரசு . மக்களை வாழவும் விடாமல் சாகவும் முடியாமல் வாட்டி வதைத்துக் கொள்ளையடித்து வருகிறது.

பிழைக்க வழியில்லை. வேலையில்லை. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு புதிதாக வேலை என்று முழங்கிய மோடியால் புதியதாக எவருக்கும் வேலை தரமுடியாமல் போனது மட்டுமின்றி ஆண்டுக்கு 2 கோடிக்கும் மேலாக வேலையில் இருந்தோரிடமிருந்து வேலையைப் பறிக்கும் சாதனையைத்தான் செய்ய முடிகிறது.

அரசு என்றால் வரி போடத்தானே செய்யும் என்பது வரைதான் மக்களுக்குத் தெரியும். அவர்களிடம் இந்த ஜி.எஸ்.டி. என்பது எந்த ஒரு அடிப்படை வாழ்விற்குத் தேவையான அத்யாவசியப் பொருளையும் விட்டு வைக்காமல் பொருட்கள் மீது திணிக்கப்பட்ட கொள்ளை வரி என்பது தெரியாது. எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது.

**மக்களின் மனநிலை:** கடைக்குப் போனோம்! விலை கேட்டோம்! ஏதோ சொன்னார்கள்.. கையிலிருந்த காசுக்கு கொஞ்சம் வாங்கினோம் ...என்ன செய்வது..இப்படி விலையேறினால் எப்படி வாழ்வது என்கிற புலம்பல்கள்தான் மக்களின் வாடிக்கையாகி விட்டது. எப்படிக் காலத்தை ஓட்டுவது என்பதுதான் மக்களின் மனநிலையாக, பெருங்கவலையாக இருக்கிறது.

ஆனால் மக்களின் நலனே எங்கள் லட்சியம் என வாய்க்கூசாது ஊளையிடும் மோடி அரசு எந்தப் பொருளையும் விட்டு வைக்காது 18 சதம் முதல் 28 சதம் வரை ஜி.எஸ்.டி. என்ற பெயரில் வரி போட்டு மக்களை வாழவிடாமல் வறுத்தெடுக்கிறது. மோடி அரசு எப்படிப்பட்டது, யார் நலன் காத்திட அது நாளும் செயல்படுகிறது? ஏழை மக்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாத மோடி அரசு நீ வாழ்ந்தாலென்ன செத்தாலென்ன என்று பிறப்புக்கும் இறப்புக்கும் வரி போட்டு மக்களின் பணத்தைச் சூறையாடும் ஜி.எஸ்.டி. முறையை மோடி அரசு புகுத்தி விட்டது..

இந்த புதிய வரிக்கொள்(கை)ளையின் கொடுமையை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். வியர்வை சிந்தி காலை முதல் மாலை வரை உழைத்துப் பெற்ற காசை வரியாய்க் கொடுத்து விட்டு ஒட்டிய வயிறோடு வாழத்தான் நாம் பிறந் தோமா? என்ற எண்ணக் கொதிப்பு வேதனையாக அல்ல எரிமலையென பீறிட்டு எழ வேண்டும். குழந்தைகளின் உணவுப் பொருளான பால் முதல் அவர்களின் ஆரம்பப் பள்ளி அட்டை, நோட்டுப் புத்தகம், பென்சில், அதைக் கூர்படுத்தும் சிறு ஷார்ப்பனர், ரப்பர் அழிப்பான் வரை எதையும் விட்டு வைக்காமல் வரி போட்டு வாழ முடியாத நிலைக்கு மக்களைத் தள்ளியிருக்கிறது ஒன்றிய மோடி அரசு.

**மோ(ச)டியின் முழக்கம்:** ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தலைமை, ஒரே வரி என்ற மோடியின் படு மோசமான மக்கள் விரோத முழக்கத்தின் வெளிப்பாடே ஜி.எஸ்.டி. வரி.

வரி சீர்திருத்தம் என்ற பெயரில் மோடி அரசால் கொண்டு வரப்பட்டது தான் ஜி.எஸ்.டி. வரி. அது எந்த சீர்திருத்தத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக மக்களின் வாழ்க்கையைச் சீரழித்து வருகிறது என்பது தான் நிதர்சன உண்மை.

கடந்த 2017ம் ஆண்டு நள்ளிரவு 12 மணிக்கு பாராளுமன்றம் பகல் போன்று ஜொலித்தது. அந்த நள்ளிரவு நேரத்தில் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. பிரதமர் மோடி மணி அடித்து ஜி.எஸ்.டி. வரிக் கொள்(ளை) கையை அறிவித்தார். மோடி அடித்த மணி கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிக்க வகை செய்ததே ஒழிய, 130 கோடி மக்களுக்கு சாவுமணியாகத்தான் அமைந்தது.

ஜி.எஸ்.டி. அமல் படுத்தப்பட்டால் சரக்கு சேவை வரிகள் குறைக்கப்படும் என முழங்கினார் மோடி. இதோ ஐந்து ஆண்டுகள் ஓடி விட்டன. எங்கே குறைந்தது? வான் தொட கூடியிருக்கிறது என்பதுதானே உண்மையிலும் உண்மை. இந்த உண்மையை மக்கள் அறிய வேண்டும். ஜி.எஸ்.டி. தொடாத பொருட்கள் இல்லை . பிறப்பு இறப்பு உட்பட என்பதுதானே வேதனை... வெட்கக்கேடும் கூட.

**வரிக்கொள்கை:** வரிக் கொள்கை நேர்முகவரி, மறைமுக வரி என இருவகைப்படும். தொழில் வரி, சொத்து வரி, வருமான வரி இவையெல்லாம் நேர்முக வரி. மக்கள் உபயோகப்படுத்தும் அனைத்து பொருட்கள் மீது விலையோடு சேர்த்து போடப்படும் வரி மறைமுக வரி. உலகின் பல நாடுகளில் இந்த வரி முறை இருந்தாலும் அங்கெல்லாம் அத்யாவசியப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அல்லது குறைவான அளவில் வரி விதிக்கப்படுகிறது.

உதாரணமாக உணவுப் பொருட்கள், மருத்துவ சேவை அவை சார்ந்த பொருட்கள், கல்வி மற்றும் கல்வி சார்ந்த பொருட்கள் வரி விலக்கு பெறுகின்றன. இந்தியாவில் அப்படியா? மக்களின் அடிப்படைத் தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய், பால், தயிர், ஆடைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள், சிறுவர்கள் கல்வி, கல்வி சார்ந்த நோட்டு, புத்தகம் என எல்லாவற்றிற்கும் ஜி.எஸ்.டி. வரி. முடி திருத்தும் நிலையம் கூட விட்டு வைக்கப் படவில்லை. வரி போடப் பட்டது என்பதோடு நிற்காது அவ்வப்போது வரியைக் கூட்டி மக்களுக்குத் துரோகம் செய்து வருகிறது மோடி அரசு.

மிகப் பெரும்பாலான உலக நாடுகளில் ஜி.எஸ்.டி. வரி பத்து சதமாகவும் அதற்குக் குறைவாகவும் இருக்கிறது. ஆனால் இந்தியாவில் ஜி.எஸ்.டி. வரி 18 முதல் 28 சதம் வரை கூட்டப்பட்டு சாதாரண மக்களை நாளும் சாகடிக்கிறது. இந்த வரி ஏற்றம் சாலையோர, பெட்டிக்கடை வியாபாரம் முதல் சிறு குறு தொழில்கள் வரை அனைத்தையும் பாதிப்புக்கு ஆளாக்கி விட்டது. இதற்கு முன் இருந்த வாட் வரியில் பல பொருட்கள் விலக்கு பெற்றிருந்தன. ஜி.எஸ்.டி. வரியோ சாதாரண மக்கள் உபயோகிக்கும் எதையும் விட்டு வைக்கவில்லை.

அதே சமயம் பாசிச மோடி அரசு எதற்கு வரிக்குறைப்பு செய்தது தெரியுமா? ஏழை எளிய பஞ்சைப் பண்டாரிகள் நித்தம் உபயோகிக்கும் வைரத்திற்கு வரி தள்ளுபடி செய்து வரியைக் குறைந்திருக்கிறது. குறைந்த ஜி.எஸ்.டி. வரி. அதுவும் எவ்வளவு தெரியுமா? வெறும் 4 சத வரி. இதன் மூலம் வைர வியாபாரம் ஓங்கி நிற்கும். குஜராத் மோடிகளையும், அவர்களின் வைர வியாபாரத்தையும் வீழ்ந்து விடாமல் காப்பாற்றி அவர்களின் கொள்ளைக்குத் துணை போயிருக்கிறது மோடி அரசு.

**பொருட்களோடு நின்றதா? வரி :** பெரும் பகுதி சாமானிய மக்கள் வாங்கும் பொருட்களோடு நின்றதா வரி என்றால் இல்லை. வங்கி சேவை, காசோலை, காசு எடுத்தல் , அஞ் சலக சேவை, சேவை சார்ந்த பரிமாற்றம் என அனைத்திற்கும் ஜி.எஸ்.டி. வரி. ஓட்டல் அறைகள், சாதாரண மக்கள் தங்கும் விடுதிகள் இவற்றிற்கும் வரி.

அரிசி, கோதுமை, மாவு, பாக்கெட் பொருட்கள், ஓட்டல் உணவு, உணவுப் பொருட்கள், அப்பளம், பன்னீர், வெண் ணெய், தயிர், மோர், வெல்லம், சர்க்கரை, பொறி, இறைச்சி, காய்கறிகள், காய் கறி நறுக்கும் கத்தி போதுமா? பல லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்யும் தீப்பெட்டித் தொழிற்சாலை, தீக்குச்சி தயாரிப்புக்கு தேவையானப் பொருட்கள் இவற்றிற் கெல்லாம் வரி. தீப்பெட்டி வாங்குவோருக்கும் தனி வரி. இன்னமும் எதற்கெல்லாம் வரி போடலாம் என பொருட்களைத் தேடிக்கொண்டிருக்கிறது மோடி அரசு.

இந்த நிலையில் எப்படி வாழ்வார்கள் சாதாரண மக்கள் ? இது ஒன்றிய மோடி அரசுக்குத் தெரியாதா? தெரியவேண்டாமா? தெரியும். தெரிந்தே செய்யும் மாபாதகச் செயல்தான் இது.

கோடீஸ்வரர்களுக்கு வரி கட்டுவதில் எந்த சங்கடமும் இருக்காது. ஏனெனில் அதையும் சேர்த்து ஏழைகளின் தலையில் தானே அவர்கள் கட்டப் போகிறார்கள்.

பாராளுமன்றத்தில் ஜனநாயக மரபுப்படி ஒரு விவாதம் கூட இன்றி கொண்டு வரப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கையே இந்த ஜி.எஸ்.டி. வரி.

**மக்கள் புரட்சி:** மக்கள் கண்களைக் கட்டி மறைமுகமாக நடைமுறைப் படுத்தப்படும் எதுவும் மக்கள் மனதில் கோபத்தையோ, ஆத்திரத்தையோ ஏற்படுத்தாது. மக்களுக்கு விலையேற்றம் தெரிகிறதேயொழிய அதன் பின் புலம் தெரியவில்லை. இதுவே மோடி அரசின் மூலதனம்.

மக்கள் விலையாக ரூ..128 கொடுத்து வாங்கும் பொருளின் உண்மை விலை ரூ.100 தான். மீதம் ரூ.28 என்பது மோடி போட்ட ஜி.எஸ்.டி. வரி என்பது மக்களுக்கத் தெரியவேண்டும் !

**பிறந்தால் வரி, வாழ்ந்தாலும் வரி, செத்தாலும் வரி என சாதாரண மக்களை வாழவிடாது சாகடிக்கும் வரிக்கொடுமை பற்றி மக்களுக்கு புரிதல் வேண்டும். வாழ்க்கையைச் சீரழிக்கும் வரிக்கொள்கையை எதிர்த்துப் போராட மக்கள் முன்வர வேண்டும்.**

பாசிச மோடி ஆட்சிக்கு முடிவு கட்டி மக்கள் நலன் காத்திட விரும்பும் ஒட்டுமொத்த அமைப்புகளின் முன்னே நிற்கும் முக்கிய கேள்வியே இதுதான் ! இனியும் இந்த நிலை நீடிக்கக் கூடாது. இது வரை விட்டு விட்டோம் என்பதைப் புறந்தள்ளி இனியாவது மக்களைத் திரட்டிடும் பணியில் முழுமையாக முனைந்து செயல்பட வேண்டும்.

இன்றைக்கு நம்மை ஆளும் பாசிச மோடி அரசு அந்த உப்பு முதல் அனைத்து சாதாரண மக்களின் உபயோகப் பொருள்களுக்கும் வரி போடுகிறதே. மக்களைச் சாகடிக்கும் அரசின் இந்த இழி நிலை கண்டு

இனியும் வாளாயிருக்கவே முடியாது !இனி பொறுப்பதில்லை என எரிதழலாய்ப் புறப்படவேண்டும் ! நாடு காத்திட, நாட்டு மக்களைக் காத்திட, நாளைய சமுதாயத்திற்கு நல்லதொரு சமூக வாழ்க்கைத் தடத்தை விட்டுச் செல்ல மக்களாகிய நாம் தான் அணி திரண்டு போராட வேண்டும்; நம்மால் முடியுமா என்றே பேச்சுக்கே இங்கு இடமில்லை ! நம்மால் முடியும் ! நம்மால் மட்டும் தான் முடியும் ! போராட்ட களம் அமைப்போம் ! ஒருங்கிணைந்து போராடுவோம் ! மக்கள் வாழ்க்கையை நாளும் நசுக்கி சிதைக்கும் ஆட்சியை முறையை வெட்டிச் சாய்த்து வீழ்த்துவோம் !

மக்கள் விரோத தேச விரோத பாசிச ஆட்சி ஒருக் காலத் திலும் மக்கள் நலன் காக்கும் அரசாக இருக்கவே முடியாது ! காரணம் அது கார்ப்பரேட் நலன் காக்கும் இலக்கை மட்டுமே ஏற்று ஆட்சியைப் பிடித்த அரசு !இந்த அடிப்படை அரசியலைப் புரிந்து கொள்வோம் ! மற்றவர்களுக்கு புரிய வைப்போம் ! நாடும் கெட்டு நாமும் கெட இனி சகியோம் ! தேசவிரோத, மக்கள் விரோத ஆட்சியாளர்களை விட, அதைப் பார்த்து சகித்துக் கொண்டிருக்கிற நாம் பெரிய குற்றவாளிகள் ஆகி விடுவோம் !

பாசிசம் வீழ்த்த மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகள் தேசபக்த மக்கள் நலன் காக்கும் சக்திகள் அனைவரும் கை கோர்ப்போம் ! காவிமய இந்துத்வ பாசிசம் அப்புறப் படுத்துவோம் !

மாவீரன் பகத்சிங்கின்ச இறுதி முழக்கம் இன்குலாப் ஜிந்தாபாத் அதுவே நமது இன்றைய முழக்கம் ! இன்குலாப் ஜிந்தாபாத் !

தொடர்புக்கு: **94449 56694**

# சங்கே முழங்கு!



# விற்பனையாகும் வன நிலங்கள்

**பழங்குடி மக்களை வஞ்சிக்கும் பா.ஜ.க!**

**கே.முருகன்,** பாண்டிச்சேரி



பழங்குடியிலிருந்து இந்தியாவின் குடியரசு தலைவரைக் கொண்டு வந்துள்ளோம் என்று பெருமை பேசும் பாஜக, மறுபக்கம் சத்தமில்லாமல், காலம்காலமாக இந்திய வனங்களில் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களை வனங்களில் இருந்து அப்புறப்படுத்தும் வேலையை செய்துள்ளது. இடதுசாரி கட்சிகளின் ஆதரவோடு ஐக்கிய முற் போக்கு கூட்டணி 1 அரசு ஒன்றிய ஆட்சியில் இருந்த போது வனங்களில் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பாது காக்கும் வகையில் கொண்டு வரப்பட்டதே, வன உரிமைச்சட்டம் 2006. இந்திய காடுகளில் சுமார் 10 கோடி பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வனங்களின் உண்மையான பாதுகாவலர்களாக இருப்பவர்கள். இந்திய காடுகளை சார்ந்து 20கோடி பழங்குடி மக்களின் வாழ்வுரிமை நேரடியாகவும், மறைமுகமாகவும் உள்ளது.

2022 மழைக்கால நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது, வன உரிமைச்சட்டம் 2006 க்கு இணக்கம் இல்லாத வகையில் வனப் பாதுகாப்பு விதிகளில் 6(தீ) சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விதிகள் வனநிலங்களை தனியாருக்கு விற்பனை செய்யும் வகையில், கிராம சபைகளை புறக்கணித்து ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்றுக்கொண்டு விற்பனை செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்கு நேரடி அதிகாரம் வழங்குகின்றது.

நிலத்தை வாங்கும் தனியார் அந்த இடத்தில் மரங்களை வெட்டுதல், வாழ்விடங்களை இடமாற்றம் செய்வது, சுரங்கம் மற்றும் கட்டுமானப் பணிகள் என்று அனைத்தையும் செய்திட தடையற்ற உரிமையையும் அளிக்கின்றது.

**பிரிட்டிஷ் ஆட்சியில் வனச்சட்டம் 1870 கொண்டு வந்து வனங்களின் விளைச்சலை சூறையாடியது. மரங்களுக்கு லெவி வசூலித்தும் வனச் செல்வங்கள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1950 வரையில் 40% வனநிலங்கள் குறைந்ததோடு பருவ நிலையிலும் மாற்றங்களை உண்டாக்கியது. பஞ்சம், பட்டினி, வருமை ஏற்பட்டது என்பதையும் அறிந்துள்ளோம்.**

பிரிஷ் ஏகாதிபத்தியத்தின் அநீதிக்கு முடிவுரை எழுதும் வகையில் முழுக்க இடதுசாரி கட்சிகளின் முயற்சியின் விளைவாக பழங்குடி மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்கும் வகையில் இயற்றப்பட்டதே வனஉரிமைச்சட்டம் 2006 ஆகும்.

தற்போது பாஜக அரசால் சேர்க்கப்பட்டுள்ள விதிகள் **6(1A), (1B)** வனங்களில் வாழும் பழங்குடி மக்களின் பாரம்பரிய உரிமைகளுக்கு எதிரானது. தொழில். வியாபாரம் என்பதன் பேரால் கிராம சபைகள், மாநில அரசுகள் பாதிக்கப்பட்ட மக்கள் குழுக்கள் என அனைத்தையும் புறக்கணித்து அதிகாரிகள் மூலம் வன சொத்துகளை கொள்ளையடிக்கும் நோக்கத்திலேயே பாஜக அரசின் செயல்பாடுகள் உள்ளது.

இவை மட்டுமல்லாமல் வனங்களின் நிலங்களை மாற்றுவது சம்பந்தமாக அந்த பகுதிகளின் கிராம சபையின் ஒப்புதல் அவசியம் என்று கூறியுள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிரானது.

வெள்ளையர் ஆட்சியிடம் இருந்து நாடு விடுதலை பெற்றதன் 75 ஆவது ஆண்டை கொண்டாடும் வேளையில் நாட்டையும் நாட்டின் வளங்களையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் காக்க மீண்டும் ஒரு விடுதலைப் போருக்கு மக்கள் ஒன்றுபட வேண்டும்.

*(ஆதாரம் இணையதள தகவல்கள்)*



- டாக்டர்.
ஜி. ஆர்.இரவீந்திரநாத்

இலவசங்கள் கூடாது என்பது, பெரு முதலாளிகளின்,

# ஏகபோகங்களின் கோரிக்கை!

**இலவசங்கள் குறித்த விவாதம் சூடுபிடித்துள்ளது.**

எது இலவசம்? எது வளர்ச்சி திட்டம் ?என்பது குறித்து முதலில் வரையறுக்க வேண்டுமாம் ! முடிவு செய்ய வேண்டுமாம் !

விவாதிக்கட்டும். முடிவு செய்யட்டும். நல்லது !

ஆனால், இந்த உலகின் செல்வாதாரத்திற்கெல்லாம் ஊற்றுக் கண் எது? யார்? அரசின் கஜானாவை நிரப்புவது யார்? அரசின் சொத்துக்கள் எங்கிருந்து வந்தது? முதன்மையான அடிப்படையான இக்கேள்விக்கான பதிலை முதலில் விவாதிக்க வேண்டாமா?

இலவசம் கூடாது என்ற கார்ப்பரேட்களின் கருத்தை... அவர்களது நலன்களுக்கான கருத்தை, மக்களின் நலன் சார்ந்த கருத்தாக மாற்றுவோர் ...

குறிப்பாக நீதியரசர்கள்... முதலில் விவாதித்து பதில் அளிக்க வேண்டிய விஷயம் இதுவல்லவா?

எதையும் படைக்காத முதலாளிகள், எதையும் உருவாக்காத முதலாளிகள்,அவர்களின் வர்க்க நலனை காக்கும் பிரதிநிதிகள் இதற்கு முதலில் பதில் சொல்ல வேண்டாமா?

உலகின் செல்வாதாரங்கள் அனைத்துக்கும் மூல ஊற்று எது? யார்? என்பதற்கு பதில் அளிக்க வேண்டாமா?

மனிதகுல வரலாற்றில் இதற்கான பதிலை முதன் முதலில் கண்டறிந்து விளக்கியவர் ,மாமேதை காரல் மார்க்ஸ் தான்.

அந்த மாமேதை தந்த விடை தான் ...

“உபரிமதிப்பு **(surplus value)**” பற்றிய கோட்பாடு. இந்த ஒரு கண்டுபிடிப்பிற்காகவே, காரல் மார்க்ஸிற்கு எத்தனை நோபல் பரிசை வேண்டுமென்றாலும் வாரி வாரி வழங்கலாம்.

இன்றைய உலகின் செல்வாதரங்கள் அனைத்திற்கும், ஊற்றுக் கண் உழைக்கும் மக்கள் உருவாக்கும் உபரிமதிப்பு தான். அதாவது கூலி உழைப்பு சுரண்டப் படுவதுதான் !


கூலி வழங்கப்படாத, உபரி உழைப்பு நேரத்தில், உபரி உழைப்பின் மூலம் உழைக்கும் மக்களால் படைக்கப்பட்டு, முதலாளிகளால் அபகரிக்கப்பட்ட “உபரிமதிப்பின்” ஒரு பகுதியிலிருந்துதான் “அரசு எந்திரமே” செயல்படுகிறது. நீதிமன்றங்கள் செயல்படுகிறது. நீதியரசர்களுக்கான ஊதியம் ,படிகள்,சொகுசு கார்கள், பங்களாக்கள், முந்திரிப் பருப்பு உட்பட அனைத்து வசதிகளும் கிடைக்கின்றன.

**பிரதமர், முதல்வர் உட்பட அனைவருக்குமான ஊதியம் , படிகள், வசதிகள் அனைத்திற்கும் மூல ஊற்று, உழைக்கும் மக்கள் உருவாக்கும் உபரி மதிப்புதான். வானத்திலிருந்து கொட்டியது அல்ல!**

நமது ராணுவம், காவல்துறை போன்றவற்றின் செலவுகளுக்கும், மூல ஊற்று, இந்த உபரி மதிப்புதான். முதலாளிகள் சுகபோகமாக வாழ்வதற்கும், அவர்கள் கட்டுவதாக பீற்றிக்கொள்ளும், கார்ப்பரேட் வரி களுக்கும்,அவர்களின் கரங்களில் குவியும் மூலதனத்திற்குமே உபரிமதிப்பே ஊற்று.

தங்களின் உழைப்பு சக்திக்கான விலையாக, மாறும் மூலதனம் **(variable capital)** மூலம் , கிடைக்கும் ஊதியத்திலி ருந்து, பற்பசை, தீப்பெட்டி, உப்பு, மிளகு, அரிசி என உழைக்கும் மக்கள் வாங்கும் அனைத்துப் பண்டங்களுக்கும், செலுத்தும் மறைமுக வரிக்கும் கூட உபரி மதிப்பே மூலம்.

அனைத்து அரசுகளுக்கும் ,உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வரும் வருவாய் அனைத்துக்கும் மூலமும் உபரிமதிப்புதான்.




உழைக்கும் மக்களின் உழைப்புச் சுரண்டப்படுதால் உருவானதே இன்றைய முதலாளித்துவ சமூகத்தின் செல்வாதாரங்கள் அனைத்தும் ஆகும்.

உழைக்கும் மக்களை சுரண்டியதின் மூலம் ,கொள்ளை அடித்ததின் மூலம் ( இலவசமாக ) உருவாக்கப்படுவதுதான் தேசத்தின் பொருளாதாரமே !

உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்ட தேசத்தின் பொருளாதாரம்,சொத்து,செல்வங்கள் அனைத்தும் , அவர்களுக்கேச் சொந்தம். ஆனால், அவர்கள் உருவாக்கிய செல்வாதாரத்திலிருந்து, கிஞ்சீற்றை மட்டும், முதலாளித்துவ அரசு உழைக்கும் மக்களுக்கு கிள்ளி போட்டுவிட்டு ,அதையும் கூட இலவசம் என்றும் வளர்ச்சி திட்டம் என்றும் நக்கல் அடிக்கிறது. நாட்டின் வளர்ச்சி பாதிப்பதாக நீலிக்கண்ணீர் வடிக்கிறது !

குடம்,குடமாய் கண்ணீர் வடிப்பதில், முன்னணியில் இருப்பவர்கள், நமது மெத்தப்படித்த உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் தான் !

நமது நீதியரசர்கள் , மார்க்ஸின் “மூலதனத்தை **(Das Capital)**“ படிக்க வேண்டும்.

இலவசம் எனச் சொல்லப்படும் அனைத்தும் இலவசமல்ல. அது உழைக்கும் மக்களுக்கு சொந்தமானது.

அது மட்டுமல்ல, இலவசம் என்ற பெயரில் வழங்கப்படும் டி.வி,லேப்டாப்,சைக்கிள்,டேப் உள்ளிட்ட பண்டங்கள் மூலம், அரசுகள் தங்களுக்கு வேண்டிய முதலாளிகளுக்கு வர்த்தக வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்றன. அவர்களின் உற்பத்தி அதிகரிக்க உதவுகின்றன என் பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், மிகை உற்பத்தி பொருளாதார நெருக்கடி உரு வாவதை மட்டுப்படுத்துகின்றன. எனவே, இலவசம் பற்றி பேசுவோர் எல்லாம், முதலில், மார்க்ஸின் “மூலதனத்தை“ படிக்க வேண்டும். “உபரிமதிப்பின் கோட்பாடுகள்” “கூலியுழைப்பும் மூல தனமும்“ “கூலி,விலை,லாபம்“ போன்ற மார்க்ஸின் படைப்புகளையும் படிக்க வேண்டும். பா.ஜ.க பக்கிகள், சங்கிகள், கார்ப்பரேட் கைக்கூலிகள் இதை எல்லாம் படிக்காது. நமது நீதியரசர்களாவது படிப்பார்களா? படித்தபின் விவா திப்பார்களா?

ஏழைகளுக்கு,உழைக்கும் மக்களுக்கு இலவசங்கள் கூடாது என்பது, பெரு முதலாளிகளின், ஏகபோகங்களின் சுரண்டலை, அபகரிப்பை மேலும் தீவிரப்படுத்த உதவும் கோரிக்கையாகும்.

தொடர்புக்கு: **9940664343**

# மாணவி ஸ்ரீமதியின் சந்தேக மரணம்... மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட வேண்டும்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கணியமூரில் இயங்கி வரும் தனியார் பள்ளி விடுதியில் தங்கிப் பயின்று வந்த, கடலூர் மாணவி ஸ்ரீமதி, ஜூலை 13ஆம் தேதி மரணம் அடைந்தார். மாணவியின் சாவு தொடர்பாக அவரது பெற்றோர்கள் எழுப்பிய ஆழமான சந்தேகங்களை பள்ளி நிர்வாகமோ, அரசுத்தரப்போ இன்னும் தெளிவுபடுத்தவில்லை. பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய ஸ்ரீமதி சந்தேக மரணத்தின் மர்ம முடிச்சுக்களை அவிழ்த்து, உண்மைக் குற்றவாளிகளை சமுகத்திற்கு அடையாளம் காட்டுவதும், குற்றவாளிகளுக்கு சட்டப்படி தண்டனை பெற்றுத் தருவதும் அரசின் சட்டப்பூர்வ கடமைப் பொறுப்பாகும். ஆனால் மாணவி ஸ்ரீமதியின் மரணம் தொடர்பாக விசாரணை அமைப்புகள் சரியான திசைவழியில் செயல்படுகிறதா என்ற கேள்வி பொது மக்களிடம் வலுவாக எழுப்பப்படுகிறது. பள்ளி நிர்வாகிகள் உச்ச நிலை அதிகார மையத்தில் அழுத்தம் தரும் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் விசாரணை அமைப்புகள் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். மாணவி உயிரிழப்பை தொடர்ந்து மூன்று நாட்கள் பள்ளி நிர்வாகம் காட்டிய அலட்சியத்தாலும், அதிகார வர்க்கம் போக்குக்கு காட்டி காலம் தாழ்த்தி வந்ததுமே, அமைதி காத்து வந்த மக்களை ஆத்திரமூட்டியுள்ளது. இதன் விளைவாக மக்களின் நேரடி நடவடிக்கை நிகழ்ந்துள்ளது. இதனையொட்டி முன்னூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இதில் ஏராளமான இளைஞர்களின் கல்வி வாய்ப்புக்கு தடை ஏற்படுத்தி, அவர்களது எதிர்காலத்தை நாசப்படுத்தப்பட்டுள்ளது.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

பொதுமக்களின் நிர்பந்தம் காரணமாக கைது செய்யப்பட்ட பள்ளி நிர்வாகிகள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளையும், வழிகாட்டு நெறிகளையும் கருத்தில் கொள்ளாது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பிணையில் விடுதலை அளிக்கும் போது, விசாரணை குற்றவாளிகள் நிரபராதிகள் என நற்சான்று வழங்கும் கருத்துக்களை வெளியிட்டிருப்பது நீதி பரிபாலன முறை மீதான நம்பிக்கையை தகர்க்கும் செயலாகும். உடற்கூறாய்வு அறிக்கைகள் உள்பட ஸ்ரீமதி மரணத்தில் ஏராளமான மர்ம முடிச்சுக்கள் விழுந்திருப்பதை வெளிப்படுத்தி வருகின்றது. இந்தச் சூழலில் பள்ளி நிர்வாகத்தின் அலட்சியமும், சட்ட அத்துமீறல் நடவடிக்கைகளும் உருவாக்கியுள்ள சந்தேக நிழல் தமிழ்நாடு அரசின் மீது விழுந்து விடாமல், ஸ்ரீமதியின் மர்ம மரண வழக்கை எச்சரிக்கையோடும், வெளிப்படையாகவும், நீதி நிலைநாட்டப்படும் வகையிலும் அணுக வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழுவின் சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# மறைபொருளான அறிவியல் மனப்பான்மை

- சி.பி. ராஜேந்திரன்




**இந்திய தேசத்தின் பயணத்தில் 75வது சுதந்திர தினம் என்பது ஒரு மிக முக்கியமான நிகழ்வு ஆகும். கடந்த ஏழு தசாப்தங்களாகப் பல துறைகளில் ஏற்பட்டுள்ளஈ மேம்பாடு குறித்து மதிப்பீடு செய்ய வேண்டிய தருணம் ஆகும். ஆனால், வேதனையளிக்கும் விதமாக, நமது நாட்டின் அறிவியல் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்து அச்சு மற்றும் இதர மின்னணு ஊடகங்கள் ( விதிவிலக்காக இது போன்ற ஒரு சில இதழ்கள் தவிர) உண்மையில் மதிப்பீடு ஏதும் மேற்கொள்ளவில்லை.**

அரசியலாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள் இன்னபிற துறைகளைச் சார்ந்த ஆளுமைகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு இருப்பினும், அறிவி யல் மற்றும் அறிவியல் அறிஞர்கள் பெருமளவிற்குப் புறக்கணிக் கப்பட்டுள்ளனர். பொதுமக்களிடையே நிலவி வரும், அறிவியல் மீதான பொதுவான ஆர்வமின்மை, அறிவியல் மனப்பான்மையின்மை ஆகியவை இந்திய உணர்வறிதிறம் (Indian Sensibility குறித்த ஒரு மோசமான கருத்துரையாக உள்ளது.

**அறிவியல் மனப்பான்மையின்மை:** தகவல் தொழில்நுட்பம், அணு விஞ்ஞானம், விண்வெளி, திடநிலைவேதியியல், வேளாண்மை, மருந்து உற்பத்தியில், உயிரியல் உள்ளிட்ட ஆராய்ச்சி துறைகளில் சொல்லத்தக்க அறிவியல் முன்னேற்றத்தை இந்தியா அடைந்து இருப்பினும், பொதுமக்களிடமும், இன்னும் சொல்வதானால், அறிவியல் அறிஞர்கள் மத்தியிலும் கூட, அறிவியல் கல்வித் திறத்தைப் பரப்புவதில் இந்தியா தோல்வி அடைந்திருக்கிறது.

42வது திருத்தத்தின் வாயிலாக, நமது அரசியலமைப்பில் ஷரத்து 51–ஏ வைச் சேர்த்திருப்பதன் மூலம் அறிவியல் மனப்பான்மையைப் பரப்புவதற்கான நமது உறுதிப்பாட்டை நாடாளுமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

ஷரத்து 51–ஏ கூறுவதாவது: "அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை மேம்படுத்த வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை யாகும்."

மேற்கண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் கூட, அறிவியல் மனப்பான்மையானது, நமது சமுதாயத்தின் அகண்ட பரப்பின் ஆழத்திற்குக் கசிவுறவில்லை. இந்தப் போக்கு, நமது தேசத்தின் எண்ணப் பாங்கினை 'அறிவின்மை' என்னும் சிறைக்குள் அடைத்துள்ளது; அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதப்படுத்தியுள்ள மதச்சார்பற்ற விழுமியங்களைக் கொன்றொழித்துப் பிற்போக்கான, மத அடிப்படைவாத அரசியலுக்கு வழிவகை செய்துள்ளது.

1950 மற்றும் 1960களில், அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஆதரவுடன், நவீன அறிவியலுக்கான ஒரு வலுவான அடித்தளம் கட்டமைக்கப்பட்டது. எனினும், பிறழ்வு ஏற்பட்டுள்ளது. எவ்வாறு ?

இந்தப் பிரச்சனையின் ஒரு பகுதி நமது அறிவியல் அறிஞர்கள் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள அறிவியல் கல்வி அமைப்புகளோடு தொடர்புடையது ஆகும். முழுவீச்சில் செயலாற்றிட சூழல் கோரிய போதும் கூட, நமது அறிவியல் அறிஞர்கள் உறுதிப்பாடு இன்றியே அறிவியல் நோக்கங்களை முன்னெடுத்தார்கள்.

'தி இந்து' நாளிதழில் 2015ஆம் ஆண்டு ஜனவரி 17 அன்று, "அறிவியல் மனப்பான்மையற்ற அறிவியல் அறிஞர்கள்" எனும் தலைப்பில் புகழ்வாய்ந்த மூலக்கூறு உயிரியல் அறிஞரான புஷ்பா பார்கவா எழுதியுள்ளது பின்வருமாறு: "உயர் பொறுப்பு வகித்த எண்ணற்ற அறிவியல் அறிஞர்கள், பகுத்தறிவு சிந்தனைப் போக்கு இல்லாதவர்களாக, மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அறிவியல் மனப்பான்மையற்றவர்களாக இருந்தனர்."

இந்திய தேசிய அறிவியல் நிறுவனம் (Indian National Science Academy) உள்ளிட்ட மூன்று உயர்மட்ட அறிவியல் அமைப்புகளிலும் அறிவியல் தொடர்புடைய சமூகப் பிரச்சனைகள் குறித்து அர்ப்பணிப்பு உணர்வற்ற நிலை நீடிப்பதைக் கண்டித்து, 1994 ஆம் ஆண்டில் இவ்வமைப்பு களிலிருந்து பார்கவா ராஜினாமா செய்தார்.

2015ஆம் ஆண்டில் அவர் எழுதிய கட்டுரையில் மேலும் கூறியிருப்பது: "நமது தேசத்தில் அறிவியல் மனப்பான்மையை ஒரு முக்கியமான கூறாகக் கருதும் அறிவியல் சூழல் இல்லாத காரணத்தால்தான் 1930 இல் இருந்து இதுவரையில் அறிவியலுக்கான நோபல் பரிசு பெறுவதற்கான ஒரு அறிஞரைக் கூட நமது தேசத்தால் உருவாக்க முடியவில்லை."

விளையாட்டுப் போட்டிகளுக்குத் தடகளப் பண்பாடு (Athletic Culture) தேவைப்படுவதைப் போன்று, தேசத்தில் அறிவியல் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், தேசம் முழுவதிலும் அறிவியல் மனப்பான்மை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பொதுமக்களிடையே அறிவியல் அறிவை வளர்த்தெடுத்து, மிகப்பெரிய அளவில் செழுமைப்படுத்த வேண்டியது அறிவியல் கல்வி நிறுவனங்களின் பணியாகும். இந்தப் பணியைச் செம்மையாக நிறைவேற்றுவதே அவ்வமைப்புகளின் இருப்பை நியாயப்படுத்த கூடும்.

**எங்கும் போலி அறிவியல் ( Pseudoscience ):** மனித இனத்தின் தோற்றம் குறித்த விஞ்ஞானபூர்வ தத்துவத்திற்கு மாற்றாக, படைப்புவாதத்தை ( Creationism ) அறிவியல் பாடத்திட்டத்திற்குள் புகுத்திட, சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவைச் சார்ந்த கிறித்தவ புத்தாக்க குழுக்கள் கடுமையாக முயன்றன. அப்போது, அந்நாட்டின் தேசிய அறிவியல் கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன் இறுதிப் பகுதி வருமாறு:

"அறிவியல் கூர்நோக்கு, பொருள் விளக்கம் மற்றும் பரிசோதனை முறை ஆகியவற்றைப் புறந்தள்ளிவிட்டு, கோட்பாட்டு அடிப்படைகளை வேராகக் கொண்டிருக்கும் மத நம்பிக்கைகளின் தொகுப்பை எந்த ஒரு அறிவியல் பாடத்திலும் அறிவியலாக ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய கோட்பாடுகளின் கற்பித்தலை அறிவியல் பாடத்திட்டத்தில் இணைப்பது, பொதுக் கல்வியின் நோக்கங்களை நீர்த்து போகச் செய்வதாகும்.

இயற்கையின் இயக்கங்களை விளக்குவதில் அறிவியல் மாபெரும் வெற்றியடைந்து வருகிறது. இந்த வளர்ச்சிப் போக்கு, பிரபஞ்சத்தைப் பற்றிய ஒரு மேம்பட்ட புரிதலை உருவாக்குவதோடு மட்டுமின்றி, பொதுமக்களின் நல்வாழ்வு, பொது சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் மாபெரும் முன்னேற்றத்திற்கும் வித்திட்டுள்ளது. நவீனகால வாழ்க்கை முறையில் அறிவியலின் அதிகரித்து வரும் பங்கு, அறிவியல் வகுப்புகளில், மதத்தை அல்ல, அறிவியலையே கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது."

நம்மைச் சுற்றிலும் வியாபித்துள்ள பல்லுயிர்த் தொகுப்பின் சூட்சுமத்தை விளக்கும் பரிணாமத் தத்துவம், பருவ கால மாற்றம் குறித்து அறிவிக்கும் அறிவியல் என்று பலவற்றையும் மறுதலிப்பதில் எங்கும் போலி அறிவியலே நிலைகொண்டுள்ளது. அத்தகைய போலி அறிவியல், நடைமுறையில் நிலைபற்றி நின்றிட, வளமான தளம் அமைத்துக் கொடுப்பதில் இந்திய தேசமும் விதிவிலக்கல்ல. நமது தேசத்திலும்கூட, போலி அறிவியலை அறிவியல் பாடத்திட்டங்களில் புகுத்திடுவதற்கான எண்ணற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஆண்டு தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகம் ஒன்றில், 'ஜோதிடம்' ஒரு பாடப்பிரிவாக அறிமு கப்படுத்தப்பட்டது. அறிவியல் பூர்வமான சான்றுகள் இல்லாத போதும், பசுவின் கழிவுக்கு நோயைக் குணப்படுத்தும் மருத்துவ குணம் இருப்பதாகக் கூறப்படும் கட்டுக்கதைகளுக்கு ஆட்சியாளர்களின் அதிகாரப்பூர்வ ஆதரவும் இருக்கிறது.

**பசுவின் சிறுநீருக்கு நோயைக் குணப்படுத்தும் தன்மை உள்ளது என்னும் கருத்துக்கு ஆதரவாகப் புராதனக் கதைகளும் அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளில் மேற்கோளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.**


இது போன்ற சூழல்களில், நமது அறிவியல் கல்வி அமைப்புகள் விமர்சன மனப்பான்மையை வெளிப்படுத்துமா ?அறிவியலுக்கான ஒரு சூழலை உருவாக்குவதில் நாம் உறுதியான பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், இலக்கு குறித்த தெளிவான பார்வையற்ற அரசியல் தலைமையின் காரணமாக, 1960 களுக்குப் பிறகு நாம் தளர்வுற்றோம்.

கற்பனைக்கும் எட்டாத வகையில், விதிமுறைகளில் சிக்குண்டு கிடக்கும் அதிகார வர்க்கம் மற்றும் தங்களை மட்டுமே வளப்படுத்திக் கொள்வதில் பேரார்வம் கொண்ட இந்திய அறிவுஜீவிகளின் குழுமத்தால் ( Indian Intelligentsia) நிலைமை மேலும் மோசமடைந்தது.

**தவறான தகவல் தொடுக்கும் தாக்குதல் ( Onslaught of Disinformation ):** அறிவுப் பெட்டகம் என்பதைக் காட்டிலும், அறிவியல், ஒரு சிறப்பு வாய்ந்த சிந்தனை முறையாகும் என்று அறிஞர் கார்ல் சகன் குறிப்பிடுகிறார். பொதுமக்களும் சிறப்பான முறையில் புரிந்து கொள்வதற்கு ஏற்ப, அறிவியலின் சிக்கலான நுட்ப விவரங்களை எளிமைப்படுத்துவதும் ஒரு கலையே ஆகும். தகவல் புரட்சியின் எதிர்மறை கூறுகளில் ஒன்றான 'உருவமைக்கப்பட்ட உண்மைகள்' ( Manufactured Truths ), கட்டுக்கதைகள் மற்றும் பொய்யான செய்திகள் தொடுக்கும் தாக்குதல்களுக்கு எதிராக, அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள உதவிடும் ஒரு பகுத்தறிவு உத்தியாக வினைபுரியும் அறிவியலின் பங்கினை நமது சக குடிமக்களும் உணரச் செய்திட வேண்டும்.

---

# கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முறையாக செயல்படுமா?




**- கே.கபில்தேவ்**

கள்ளக்குறிச்சி மாவட்டம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு 3 ஆண்டுகளை கடந்து செல்லும் நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தி சிறுவங்கூர் கிராம எல்லையில் 8,128 ஹெக்டர் பரப்பளவில் ரூ.381.76 கோடி திட்ட மதிப்பீட்டில் மருத்துவ கல்லூரி கட்டிடங்கள் கட்ட அதிமுக ஆட்சியில் அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகள் முடிவுற்று இப்போதைய திமுக அரசு ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன்பு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டிடத்தை காணொளி காட்சி மூலம் திறந்தும் வைத்தார்.

150 எம்.பி.பி.எஸ்., மாணவர் சேர்க்கை இடங்களைக் கொண்டு 900 பெட் வசதியுடன் 2ம் ஆண்டில் அட்மிஷன் தொடங்க உள்ளது. இந்த நிலையில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எம்ஆர்ஐ ஸ்கேன் போன்ற மருத்துவ பரிசோதனை நவீன தொழில்நுட்ப மிஷின்கள், மருத்துவ கருவிகள், உபகரணங்கள் இல்லாததாலும், போதிய டூட்டி டாக்டர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாக இருப்பதாலும் மேலும் ஆய்வகத்தில் லேப் டெக்னீசியன்கள், மருந்தாளுனர்கள், எக்ஸ்ரே ஆபரேட்டர்கள் பணியிடங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையிலேயே பணியிடங்களை பூர்த்தி செய்யாததால் நோயாளிகள் அவதிப்படுவதாக கூறுகின்றனர். மருத்துவமனையில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை, மருத்துவமனை வளாகம் சுகாதாரம் இன்றி தொற்று பரவும் நிலையில் உள்ளதாக கூறுகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நம்பி ஒரு நாளைக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிப்புற நோயாளிகள் வந்து சொல்கின்றனர். இதில் ஒரு நாளைக்கு 100க்கும் மேற்பட்டோர் உள்புற நோயாளியாக அனுமதிக்கப்பட்டு முழுமையான சிகிச்சை பெற முடியாமல் ஏமாந்து செல்வதாக கூறுகின்றனர். மேலும் சிகிச்சை அளிக்க முடியாத மருத்துவர்கள் கீழ்மட்ட பணியாளர்கள் மூலம் நோயாளிகளை தனியார் மருத்துவமனைகளுக்கு போக சொல்லி கைகாட்டி வெளியேற வைக்கும் அவலம் அரங்கேறுவதால் ஏழை அப்பாவி நோயாளிகள் வாடி வதங்கி வட்டிக்கு கடன் வாங்கி வெளியில் சென்று வைத்தியம் பார்க்க வேண்டிய கொடுமைக்கு தள்ளப்படுகிறார்கள். கள்ளக்குறிச்சி நகரில்




தவறான உலக கண்ணோட்டத்தை வார்த்தெடுக்கும் பகுத்தறிவின்மையொன்றும் நமது சமுதாயத்திற்குப் புதியது அன்று. ஆனால், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக, அது போன்ற தவறான கண்ணோட்டம் மற்றும் தகவல்கள் நொடிப்பொழுதில் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடைந்து விடுகிறது. தவறான தகவல்கள் ஜனநாயகத்தின் பல கூறுகளையும், மனித உரிமைகளையும் எவ்வாறு பலவீனப்படுத்துகிறது என்பதையும் நாம் பார்த்து வருகிறோம்.

போலி அறிவியலை ஊக்கப்படுத்தும் ஒருதலைப்பட்சமான, அறிவார்ந்த கருத்து குவியலுக்கு எதிராக நாம் களம் காண்கிறோம். மேற்குலகின் போற்றுதலுக்குரிய அறிவியல் அறிஞர்களான – கார்ல் சகன், ஸ்டீபன் ஹாக்கிங், ஸ்டீவன் வெயின்பெர்க், ஸ்டீபன் ஜெ கவுல்டு , கார்லோ ரோவெலி, ரிச்சர்டு டாக்கின்ஸ், நீல் டிகிராஸ் டைசன் மற்றும் நம் நாட்டு அறிவியல் அறிஞர்களான யஷ்பால், புஷ்பா பார்கவா மற்றும் ஜெயந்த் நர்லிகர் ஆகியோர் வலியுறுத்திக் கூறும் ஒற்றை கருத்து பின்வருமாறு:

”அறிவியலில் பின்பற்றப்படும் மிகவும் வெற்றிகரமான மற்றும் காலங்கள் பல கடந்தும் நீடித்து நிற்கும் முறைகளைப் பயன்படுத்தி உய்யச் சிந்தனைக்கான **( Critical Thinking )** தனித்திறத்தை வளர்த்திடல் வேண்டும்.”

அறிவியல் ரீதியாக நிரூபணமான உண்மைகளுக்கு எதிராகக் குவிக்கப்படும் குருட்டுத்தனமான நம்பிக்கைகளை விட்டொழிக்கும் அறிவுத் திறமற்று இருக்கும் அரசியலாளர்கள் மற்றும் அரசாங்க நிர்வாகத்தினர், அத்தகைய நம்பிக்கைகளைக் கடந்து வர மறுப்பதை நாம் எவ்வாறு எடுத்துரைப்பது? புறவயமான எதார்த்தத்தைப் **( Objective Reality )** பார்க்க மறுப்பதையும், மாயைகளை நொறுக்கும் முரண்பட்ட ஆதாரங்கள் பெறப்பட்ட பின்னரும் கூட, தனது சொந்த நம்பிக்கைகளைப் பற்றிக் கொண்டிருக்கும் மனப்பான்மையையும் நாம் எவ்வாறு எடுத்துரைப்பது?

சுயவிழிப்புணர்வும் அறிவார்ந்த செயல்திறனும் குறைவாக இருக்கும் காரணத்தால், குறைவான விஷயஞானம் கொண்டிருப்பவர்களும் கூட, தங்களை நிபுணர்களாகக் கருதிக் கொள்கிறார்கள். இதற்கு மாறாக, ஏதேனும் ஒரு விஷயம் குறித்து அதிகம் தெரிந்தவர்கள், அது குறித்து நிச்சயமற்ற கருத்து கொண்டவர்களாக விளங்குகிறார்கள்; ஆதாரங்கள் இன்றி நம்ப மறுப்பவர்களாக விளங்குகிறார்கள்.

தேசத்தின் 75வது சுதந்திர தினக் கொண்டாட்டம், பழம் பெருமைகளையும், சாதனைகளையும் பற்றிய சொற்பொழிவுகளாகவும், நம்மை நாமே புகழ்ந்துரைத்துக் கொள்ளும் சாதாரண கொடியேற்று விழாவாக மட்டுமே இருந்துவிடக் கூடாது. ஒரு வளமான வருங்காலத்தைக் கட்டமைத்திட, நமது வெற்றி மற்றும் தோல்விகளை விமர்சன அடிப்படையில் மதிப்பீடு செய்திடக் கிடைத்த மகத்தான வாய்ப்பாகச் சுதந்திர தினக் கொண்டாட்டம் கருதப்பட வேண்டும். அத்தகைய வருங்காலத்தைக் கட்டமைப்பதில் அறிவியலும், அறிவியல் கல்வியறிவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழில் – **அருண் அசோகன்**

*நன்றி: தி இந்து, 24.08.2022*

# தொழிலாளர் சட்ட தொகுப்புகள் குறித்த பிரதமர் மோடியின் கருத்துகள்

## ஏஐடியுசி பொதுச்செயலாளர் அமர்ஜீத் கவுர் கடும் கண்டனம்



இந்திய பிரதமர் 25.08.2022ம் தேதியன்று, மாநில தொழிலாளர் அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர் துறை செயலாளர்கள் கூட்டத்தில் காணொளி வாயிலாக ஆற்றிய உரையைக் கண்டித்து ஏஐடியுசி பொதுச்செயலாளர் தோழர் அமர்ஜீத் கவுர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

பிரதம மந்திரி ஆகஸ்ட் 25, 2022 அன்று தொழிலாளர் அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர் துறை செயலாளர்கள் கூட்டத்தில் வழக்கம் போலவே தனது கற்பனை கதை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளார்.

‘தேசிய தொழிலாளர் மாநாடு’ என்று அவர்களாக பெயரிட்டு கொண்ட அந்தக் கூட்டத்தில், பிரதமர் ஆடம்பரமான சொல்லாடலில், தொழிலாளர் சட்ட தொகுப்புகள், தொழிலாளர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது என்று கூறியுள்ளார். இது ஒரு முழுப் பொய்யாகும்.

பொய்களையே உண்மையைப் போல் பேசுவதற்கு, ஏஐடியுசி கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறது.

80%க்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு கேடு விளைவிக்கும் இந்தத் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக, 2022 மார்ச் 2829 தேதிகளில் 25 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அவர்கள் முன்வைத்த கருத்துக்களை கொஞ்சமும் மதிக்காமல், பிரதமர் பேசுவதை நாங்கள் கண்டிக்கிறோம்.

பிரதமரின் இந்தச் செயல், போராடிய கோடிக்கணக்கான தொழிலாளர்களைக் கேலி செய்வதோடு, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது.

தொழிலாளர்களை அடிமைகள் காலத்திலிருந்து விடுவிப்பதற்காகவே தனது அரசு முன் முயற்சிகளை எடுத்துள்ளதாக மோடி பேசுகிறார். ஆனால், இந்தச் சட்டத் தொகுப்புகள் புதிய அடிமைத்தனத்தை, தொழிலாளியைச் சுற்றிக் கட்டமைக்கின்றன. இந்தியாவின் மொத்த தொழிலாளர்களில் 90% பேர் அமைப்பு சாராத, ஒப்பந்தமுறை, அவுட்சோர்சிங் தொழிலாளர்களாவர். இவர்களிடமிருந்து ‘தொழிலாளர்’ என்ற தகுதியே முற்றிலுமாகப் பறிக்கப்படுகிறது.

தொழிலாளர்களும், மத்திய தொழிற்சங்கங்களும் இந்தச் சட்ட தொகுப்புகளைத் திரும்பப் பெறுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தும், அதைப் பார்க்கவோ, கேட்கவோ மோடி தயாராக இல்லை.

‘சட்டத்தைப் பற்றி தான் அறியவில்லை’ என்று கூறுவதை ஒரு காரணமாக ஏற்க இயலாது என பழங்கால சொல்வழக்கு ஒன்று உண்டு. “இந்தச் சட்டத் தொகுப்புகளால் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் உறுதிப்படுத்தப்படும்; வேலை பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு, மருத்துவ பாதுகாப்பு ஆகியவற்றை தொழிலாளர்களுக்கு கொடுத்து அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.” என்று பிரதமர் பேசியிருப்பது பெரும் விந்தையாகவும், வியப்பாகவும் இருக்கிறது.

உண்மையில், மிகப் பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு இதுவரை இருந்த, பாதுகாப்புகளைக் கூட மொத்தமாக இந்தச் சட்ட தொகுப்புகள் பறிக்கின்றன. பிரதமரின் அறியாமை இவ்வளவு நஞ்சு தோய்ந்து கிடக்கிறதே!

பெண்களின் ஆற்றலை சரியாகப் பயன்படுத்தி இந்தியா தனது இலக்குகளை எட்ட வேண்டும் என்று பிரதமர் பேசுகிறார். அவர் சொல்வதற்கு மாறாக, அவரது சட்டத் தொகுப்புகளின் உள்ளடக்கத்தைப் படித்தால், சட்ட வரம்புகளுக்கு வெளியே பெண் தொழிலாளர்களை அவை தூக்கி வீசுகின்றன.

இந்திய தொழிலாளர் எண்ணிக்கையில், ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து கொண்டிருப்பதைப் பிரதமர் நேர்மையாக ஒத்துக் கொண்டிருக்க வேண்டும். அமைப்பு சார்ந்த துறையிலும், அமைப்பு சாராத துறையிலும், இந்த ஆண்பெண் எண்ணிக்கை இடைவெளி, உலக சராசரியை விட மிக அதிகமாகவே இந்தியாவில் உள்ளது. உழைப்பில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்த, அரசாங்கத்திடம் உருப்படியான எந்தக் கொள்கையும் இல்லை.

பிரதமரின் சொற்களஞ்சியத்தைச் சரி செய்யும் நேரம் இதுவல்ல. அவர் எப்போதும் தடம் புரண்டு தான் பேசுகிறார். தொடர்ந்து அவ்வாறே பேசுவார். வேளாண் சட்டங்களை இயற்றும் போதும் அவர் இதையேதான் செய்தார்.

வேளாண் சட்டங்கள் விவசாயிகளுக்கு அதிகாரமளிக்கும் என்று தான் சொன்னார். ஆனால், விவசாயிகளின் வரலாற்றுப் போராட்டத்துக்குப் பின், அந்தச் சட்டங்களைத் திரும்பப் பெற ஒப்புக் கொண்டார். உண்மையிலேயே, அச்சட்டங்கள் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் அளவுக்கு தூய்மையானவை என அரசு நம்பினால், ஏன் அந்த விவசாயிகளை ஏற்கச் செய்ய இயலவில்லை?

சட்டங்களுக்கும், நாடாளுமன்ற நடைமுறைகளுக்கும் விரோதமான வகையில் நிறைவேற்றப்பட்ட, நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளையும் திரும்ப பெற வேண்டும் என்று இந்திய தொழிலாளி வர்க்கம் வலியுறுத்துகிறது. பிரதமரோ, ‘தேசிய தொழிலாளர் மாநாட்டில்’ தனது உரையின் மூலம் மக்களை ஏமாற்றவும், தவறாக வழிநடத்தவும் முயன்றுள்ளார்.

அனைத்திந்திய தொழிற்சங்க பேராயம் (ஏஐடியுசி), இந்தச் செயலைக் கண்டிக்கிறது. தொழிலாளர் குறியீடுகளை, சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெறுவதற்காக மற்ற அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள், துறைசார் கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து இன்னும் அதிக வீரியத்தோடும், வீச்சோடும் போராடுவதற்கு தன்னை மறுஅர்ப்பணம் செய்கிறது.

**அமர்ஜீத் கவுர்,**

பொதுச் செயலாளர், ஏஐடியுசி .

புற்றீசல் போல தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. மேலும் மருத்துவம் வணிகமயமாகிவிட்டதால் அரசு ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் பெரும்பாலான டாக்டர்கள் வெளியில் கிளினிக்குகள், தனியார் மருத்துவமனைகளை அமைத்து நடத்தி வருவதாக தெரிவிக்கின்றனர். அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறை சேவை குறைந்து கடமைக்கு பணியாற்றி விட்டு வெளியில் பணத்துக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதில் ஆர்வம் காட்டுவதாக பொதுமக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். ஆகவே அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அந்தஸ்தை பெற்று இயங்கும் கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ பரிசோதனை கருவிகள், உபகரணங்கள், போதிய மருத்துவர் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்களை நியமித்து உண்மையான உயர் சிகிச்சை அளித்து ஏழை நோயாளிகளின் உயிர்காக்கும் மருத்துவமனையாக செயல்பட உறுதி செய்ய அரசும் மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கள்ளக்குறிச்சி மாவட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு: **98942 74211**

# ஒன்றிய பா.ஜ.க அரசாங்கத்தின் அதிகார துஷ்பிரயோகம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அரசாங்க அமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

எதிர்கட்சித் தலைவர்கள் மீது, குறிப்பாக, பா.ஜ.க அல்லாத கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களைச் சார்ந்த தலைவர்கள் மீது வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வு நிறுவனம் உள்ளிட்ட அரசாங்க அமைப்புகள் கட்டவிழ்த்துவிடப்படுவது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது.

ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, பா.ஜ.க அல்லாத கட்சிகளின் ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்காக அரசு எந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

ஊழல் எதிர்ப்பு எனும் பெயரில் அர சாங்கம் மேற்கொண்டு வரும் பாரபட்சமான நிலைப்பாட்டைக் கட்சி நிராகரிக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் மட்டுமே ஊழல் செய்தவர்கள் என்பது போலவும், ஆளும்கட்சியைச் சார்ந்த தலைவர்கள் எவரும் ஊழலில் ஈடுபடாதவர்கள் என்பது போலவும் கருதி அரசாங்கம் செயல்படுகிறது. அனைத்து விதமான ஊழல்களையும் ஒழிப்பதற்கான போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் இருந்து வருகிறது.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பா.ஜ.க.வின் தேசியக் கொடி பிரச்சாரம்:

## சில வரலாற்று குறிப்புகள்

**தற்போதைய அரசாங்கத்தின் வழிகாட்டிகள், மூவர்ணக் கொடி தேசியக் கொடியாகத் திகழ்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருபவர்கள் ஆவர்.**

இந்தியாவின் ஆட்சியாளர்கள், அவர்களது கூட்டாளிகள் மற்றும் தற்போதைய அரசாங்க நிர்வாகத்தார் திடீரென்று நமது மூவர்ணக் கொடி மீது பெரும் பற்று கொண்டவர்களாக காட்டிக் கொள்கிறார்கள். அனைத்து இல்லங்களிலும் மூவர்ணக் கொடி ஏற்றுவது (ஹர் கர் திரங்கா) எனும் பிரச்சாரத்தின் கீழ், 75வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, அதன் ஒரு பகுதியாக, ஆகஸ்ட் 13 முதல் 15 வரை, 24 கோடி இல்லங்களில் மூவர்ணக் கொடியை ஏற்றிட ஒன்றிய பாஜக அரசாங்கம் முனைப்புடன் திட்டமிட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1925ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து, இந்த அமைப்பானது, மூவர்ணக் கொடி இந்திய தேசியக் கொடியாகத் திகழ்ந்து வருவதை எதிர்த்து வருகிறது. தேசியக் கொடி மீதான இந்துத்துவ சக்திகளின் எல்லையற்ற வெறுப்புணர்வை அறிந்து கொள்ள, ஆர்.எஸ்.எஸ் மற்றும் வி.டி.சவர்க்கர் தலைமையிலான இந்து மகாசபையின் ஆவணத் தொகுப்புகளை ஒருவர் படிப்பதே போதுமானது ஆகும்.

**கடிதப் போக்குவரத்து:**

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான, இந்திய மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் குறியீடாகத் திகழ்ந்த எந்த ஒரு விஷயத்தையும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு வெறுத்தது. இதற்கு, தேசியக் கொடி மீதான அதன் வெறுப்புணர்வு மிகவும் பொருத்தப்பாடு நிறைந்த ஒன்று ஆகும். 1929ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு, அந்த ஆண்டு முதல் இனி வரும் ஆண்டுகளில் ஜனவரி 26 ஆம் நாளை, மூவர்ணக் கொடியை ஏற்றி, கொடிக்கு வீரவணக்கம் செலுத்தி, சுதந்திர தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

ஆனால், அதற்கு எதிர்மறையாக, காவிக் கொடியை தேசியக் கொடியாக வணங்கிட வேண்டும் என்று வலியுறுத்தி, ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் தலைவர் கே.பி. ஹெட்கேவர், அனைத்து ஆர்.எஸ்.எஸ் ஷாகாக்களுக்கும் 1930 ஜனவரி 21 அன்று சுற்றறிக்கை அனுப்பினார்.

தேசிய கருத்தொற்றுமையைத் துச்சமெனத் தூக்கியெறிந்துவிட்டு, 1930 ஜனவரி 26 அன்று மாலை 6 மணிக்கு, ஷாகாக்கள் நடைபெறும் அவரவர் ஸ்தலமான சங்கஸ்தானத்தில் அணிதிரண்டு காவிக் கொடியை ஏற்றி, அதனைத் தேசியக் கொடியாகப் போற்றிட வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. [ ஆதாரம்: Dr. ஹெட்கேவர் கடிதங்களின் இந்தி மொழிபெயர்ப்பு, அர்ச்சனா பிரகாஷன், இந்தூர், 1981, ப.எண்: 18 ]

இந்தச் சுற்றறிக்கை வாபஸ் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1946, ஜூலை 14 அன்று நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ் தலைமையகத்தில் குருபவுர்ணமி நிகழ்வுக்காக கூடியிருந்தவர்கள் மத்தியில், அந்த அமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவரும், புகழ்பெற்ற இந்துத்துவ சித்தாந்தவாதியுமான எம்.எஸ்.கோல்வால்கர் பேசியது பின்வருமாறு:

"காவிக் கொடியே பாரதப் பண்பாட்டை முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்கிறது. அதுவே, இறைவனின் காட்சிப் பிரமாணம் ஆகும். தேசம் முழுவதும் இறுதியில் காவிக் கொடியைப் போற்றிப் புகழ்ந்து பணிந்திடுமென்று நாம் உறுதிபட நம்புகிறோம்." [ எம். எஸ். கோல்வால்கர் தொகுதி 1, பாரதீய விசார் சாத்னா, நாக்பூர், ப.எண்: 98 ]

தேச விடுதலையின் போது, செங்கோட்டைக் கொத்தளத்தில் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மும் முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் சாமானிய மக்கள் தமது கரங் களில் மூவர்ணக் கொடியை ஏந்தி வீறுநடை போட்டனர்; வீடுகளின் உச்சத்தில் தேசியக் கொடியைப் பறக்கச் செய்தனர்.

ஆனால், அதிர்ச்சி கொள்ளத்தக்க வகையில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஆங்கில இதழான ஆர்க னைசரில் 1947 ஆகஸ்ட் 14 அன்று, தேசியக் கொடியின் மாண்பைச் சிதைக்கும் வண்ணம் எழுதப்பட்டது பின்வருமாறு:

"விதியின் தயவால் இன்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்கள் நமது கைகளில் மூவர்ணக் கொடியைக் கொடுத்து விடலாம். ஆனால், அந்தக் கொடி ஒருபோதும் இந்துக்களால் ஏற்கப்படவோ, மதிக்கப்பவோ மாட்டாது. 'மூன்று' எனும் அந்தச் சொல்லே தீமை பயக்கக்கூடியது, மூன்று வண்ணங்களைக் கொண்ட ஒரு கொடி, நிச்சயமாக, மிக மோசமான உளவியல் விளைவை ஏற்படுத்தும் என்பதோடு, தேசத்திற்கு சேதம் விளைவிக்கக் கூடியதாகும்."

ஆர்.எஸ்.எஸ் அமைப்பைப் பொறுத்தவரையில், இந்திய தேசியக் கொடி ஒருபோதும் இந்துக்களால் மதித்துப் போற்றத்தக்கதன்று; தேசத்திற்கு அந்தக் கொடி சேதத்தை உண்டாக்கக் கூடியதாகும்.

**தலையங்கம்**

ஆர்கனைசர் இதழின் தலையங்கம் [ "தேசத்தின் கொடி" ஜூலை 17 1947 ] ஒன்றில், இந்திய அரசியல் நிர்ணய சபையின் தேசியக் கொடிக்கான குழு, மூவர்ணக் கொடியைத் தேசியக் கொடியாக ஏற்க முடிவு செய்தது குறித்து எழுதப்பட்டது பின்வருமாறு: "இந்தியாவின் அனைத்து சமூகங்கள் மற்றும் பிரிவினருக்கு ஏற்புடையதாகக் கொடி இருந்திடல் வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் ஏற்பதாக இல்லை.




**<u>இது முற்றிலும் முட்டாள்தனமானது. கொடி, தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்துஸ்தானத்தில் இந்து தேசம் என்னும் ஒற்றைத் தேசம் மட்டுமே இருக்கிறது. அனைத்து சமூகங்களின் அபிலாஷைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு கொடியை நாம் தேர்ந்தெடுக்க முடியாது. நமக்கான சட்டை அல்லது கோட்டைத் தைப்பதற்கு தையல்காரரிடம் கூறுவது போல் கொடியைத் தேர்ந்தெடுப்பதில் நாம் கூறிவிட முடியாது."</u>**

இதுவே சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நமது மூவர்ணக் கொடியின் வடிவமைப்பு பற்றிய ஆர்.எஸ்.எஸ்.ன் கருத்தாக இருந்தது.

**1947 க்குப் பின்னர்**

தேச விடுதலைக்குப் பின்னரும் கூட, மூவர்ணக் கொடியைத் தேசியக் கொடியாக ஏற்க ஆர்.எஸ்.எஸ். மறுத்தது. தேசியக் கொடியாக மூவர்ணக் கொடி தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து கண்டனம் தெரிவித்த கோல்வால்கர், தனது 'சிந்தனைக் கொத்து' **[ Bunch of Thoughts, Collection of writings/speeches of Golwalkar ]** என்னும் நூலில் எழுதியிருப்பது பின்வருமாறு:

"நமது தேசத்திற்காக ஒரு புதிய கொடியை நமது தலைவர்கள் வடிவமைத்துள்ளார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள்? அவர்களின் செயல் நோக்கமின்றிப் பயணிப்பதாகும், மற்றொன்றைப் பின்பற்றுவதுமாகும். நமது தேசம் பழம்பெரும் தேசம்; தொன்மைப் புகழ்வாய்ந்த மாபெரும் தேசமாகும். நமக்கென்று சொந்தமாகக் கொடி இருந்ததில்லையா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமக்கென்று தேசியச் சின்னம் இருந்ததில்லையா? ஐயத்திற்கு இடமின்றி, அவை இருந்தன. பிறகு, ஏன் நமது சிந்தனைகளில் இது போன்ற பெரும் வெற்றிடம்? இது போன்றதொரு இன்மை நிலை." **[ M. S. Golwalkar, Bunch of Thoughts, Sahitya Sindhu Prakashan, Bangalore, 1966 pp 237-38 ]**

சாவர்க்கரும் மூவர்ணக் கொடியை தேசியக் கொடியாக ஏற்க மறுத்தார். தேசியக் கொடியைப் புறக்கணிக்கக் கோரிய அவர், 1941ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று தனது பிரகடனத்தை அறிக்கை ஒன்றில் வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது:

"பரந்து விரிந்த இந்துஸ்தானத்தில் மதித்துப் போற்றப்பட்ட, யுகம் யுகமாகத் தொடர்ந்திடும் கோட்பாடு மற்றும் இந்து மதத்தின் மிகப் புராதனமானக் குறியீடுகளான ' ஓம் மற்றும் ஸ்வஸ்திக்' சின்னங்களைக் கொண்ட 'குண்டலினி க்ருபாணங்கித்' மகாசபையின் கொடியைக் காட்டிலும் இந்து சாம் ராஜ்யத்தை முழுவதுமாக வேறு எந்தவொரு கொடியும் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்பதை இந்துக்கள் அறிவார்கள்.

எனவே, அகண்ட இந்து சாம்ராஜ்யக் கொடியை மதித்துப் போற்றாத எந்தவொரு ஸ்தலத்தையும், விழாவையும் இந்து மகாசபை உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும். இந்துக்களின் தொன்மை வாய்ந்த தேசத்திற்கும், பெருமித உணர்வுக்கும் நூல் நூற்பு இராட்டை ஒருபோதும் குறியீடாக இருந்திட முடியாது. **[ Extracts from the President's Diary of his Propagandist tours Interviews from December 1937 to October 1941, Bombay PN: 469, 473 ]**

தேசியக் கொடியாம் மூவர்ணக் கொடியைக் கொச்சைப்படுத்தி, தேசியக் கொடிக்கு மாற்றாக காவிக் கொடியை முன்னிலைப்படுத்தும் செயல்திட்டத்தைக் கைவிடுமாறு ஆர்.எஸ்.எஸ் அமைப்பைப் பாஜக அரசாங்கம், சமாதானம் செய்து இருந்தால், இந்த அரசாங்கத்தின் [ ஹர் கர் திரங்கா ] பிரச்சாரம், ஒருவேளை, பொதுமக்களிடம் நம்பகத்தன்மையைப் பெற்றிருக்கக்கூடும்.

இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயக அரசியல் அமைப்பை நீர்ந்து போகச் செய்வதற்கான மாபெரும் சதித்திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்தக் காவிக்கொடி என்பதை நாம் நமது சிந்தனையில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: இக்கட்டுரைக்கான ஆதாரங்கள் – ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து மகாசபை வெளியீடுகளில் இருந்து பெறப்பட்டவை ஆகும்.

கட்டுரையாளர்: ஷம்சுல் இஸ்லாம், டெல்லி பல்கலைக்கழ கத்தில் அரசியல் விஞ்ஞானம் பயிற்றுவிப்பவர்.

தமிழில் : **அருண் அசோகன்**

நன்றி: *தி இந்து நாள்: 26.08.2022*

# வழிப்பறி கொள்ளையாகும் சுங்கக் கட்டண உயர்வை ரத்து செய்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

ஒன்றிய அரசின் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்னும் நவதாராளமயக் கொள்கை அமலாக்கத்தில் தேசிய நெடுஞ்சாலைகளும், மாநில நெடுஞ்சாலைகளும் தனியார்களுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்கள் நாடு முழுவதும் சுங்க சாவடிகள் அமைத்து கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றன. சுங்கக் கட்டணத்தை ஆண்டுக்கு இருமுறை உயர்த்திக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி செப். 01 முதல் கார், வேன் போன்ற சிறயரக வாகனங்களுக்கு ரூ.10/ம், பயணிகள் பேருந்துக்கு தலா ரூ.20/ம், சரக்கு வாகனங்களுக்கு ரூ.150/ வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 48 சுங்கச்சாவடிகளில் தினசரி ரூ.135 கோடி கட்டணம் செலுத்தி வரும் வாகன உரிமையாளர்கள் மேலும் அதிக சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக அனைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி அதிகரித்து மக்கள் வாழ்வில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். மக்கள் நலனை பலியிட்டு பன்னாட்டு நிறுவனங்களின் சட்டப்பூர்வ கொள்கைக்கு வழியமைத்து வரும் பாஜக ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வன்மையாக கண்டிக்கிறது. உயர்த்தப்பட்ட சுங்கக் கட்டணத்தை ரத்து செய்து, விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடிகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



# ஜி.யு.போப்பை பற்றி சங்பரிவார் அடியாளின் வாய் கொழுப்பு பேச்சு

பேராசிரியர்.மு.நாகநாதன்

**ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து நல்லவர்களையும், நாட்டிற்கு , மொழிக்கு தொண்டு செய்தவர்களையும் வெறிப்பிடித்து கடிப்பதை வழக்கமாக கொண்டு செயல் படுவது சங்பரிவாரங்களின் அன்றாட செயலாக மாறிவருகிறது.**

ஏழ்மையும், ஏற்றத்தாழ்வும் நிறைந்து வாழ்விழந்து, சீரழிந்து வரும் பெரும்பான்மையான மக்களின் சரிந்து வரும் வாழ்வு நிலைப்பற்றி கவலைப்படாமல், அன்றாடம் செத்துப்போன வேதப் பொய்களை பரப்பி, சமுதாயத்தில் பிளவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி வருகிறது இந்த சனாதன கும்பல்.

குஜராத் கோட்சே கும்பலின் ஆட்சி நடைபெறுவதால் யாரையும் தாக்கலாம், எவரையும் புண்படுத்தலாம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இந்தியாவின் சமூக அமைதியை குலைத்து வருகிறார்கள் இந்த பாசிச கோலேந்திகள்.

2015 ஆண்டு பாஜக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தருண் விஜய் திருவள்ளுவருக்கு ஹரித்வாரில் கங்கை கரையில் சிலை வைப்பேன் என்று தமிழ்நாட்டில் ஒரு பயணம் மேற்கொண்டார். இதை நம்பி சில தமிழ்விரும்பிகள் தருண் விஜய் தலையில் தூக்கி ஆடினர்.

வைத்த திருவள்ளுவர் சிலையை ஆடையின்றி அலையும் இந்து சாதுக்கள் அகற்றினர்.

பிறகு தமிழ்நாட்டில் இந்த தீச்செயலுக்கு எதிர்ப்பு வலுக்கவே மீண்டும் வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது.

மாமல்லபுரம் சிற்பிகள் செய்த சிலையை விட்டு விட்டு நாமக்கல் உருவான சிலை வைத்தார் தருண் விஜய்.

சிறப்பான வகையில் மாமல்லபுரம் சிற்பிகள் வடிவமைப்பு செய்த வள்ளுவர் சிலையை வாங்காமல் ஏமாற்றினார் என்ற குற்றச்சாட்டும் அன்று எழுந்தது.

இன்றோ வள்ளுவர்சிலை வடநாட்டில் போதிய பராமரிப்பு இல்லாத நிலையில் உள்ளது.

ஆனால் பட்டேல் சிலைக்கு ரூபாய் 3000 கோடி செலவு என்று கணக்கு காட்டினார்கள்.

அயோத்தில் இராமன் கோயில் கட்ட வாங்கிய நிலத்தில் ஊழல் முடை நாற்றம் வீசுகிறது.

தமிழ்நாடு மக்களை ஏமாற்ற இது போன்ற கபட நாடகங்களை சங்கிகள் 2024 வரை தொடரலாம்.

சில நாட்களுக்கு முன்பு இன்னோரு கோட்சே சீடர் வள்ளுவத்திற்கு காவி விளக்கம் அளித்துள்ளார் .

அதுவும் புதுதில்லியில் ஒரு பள்ளியில் வள்ளுவர் சிலை திறந்து அறிஞர் ஜி.யு. போப்பை வம்புக்கு இழுத்துள்ளார்.

காலனி ஆதிக்க நோக்கத்தோடு இந்தியாவின் ஆன்மீக உணர்வை சிதைத்து விட்டாராம் பேரறிஞர் ஜி.யு.போப்.

எந்த மண்டை சுருங்கி எழுதி கொடுத்ததோ இந்த ஆட்டு தாடிக்கு !

திருக்குறள் மொழிபெயர்ப்பு முன்னுரையில் ஜி.யு.போப் “எந்த மொழி மொழிபெயர்ப்பும் திருக்குறளில் காணப்



படுகிற எண்ணத்தை இனிமையூட்டும் பொருள் உணர்வோடு வெளிப் படுத்த முடியாது.

உண்மையைக் கூற வேண்டுமெனில், வெள்ளிப் பேழையில் தங்க ஆப்பிள் என்றும்,

**(No translation can convey an idea of its charming effect; it is truly an apple of gold in a network of silver)**

குறளில் அமைந்துள்ள சில நுட்ப திட்பங்கள் கிரேக்க மொழியின் வீரப்பாக்களிலும் **(Epigram- in-Martial)**

இலத்தீன் மொழியின் இரங்கற்பாக்களிலும் தான் **(Elegiac verse)** காணப்படுகின்றன” என்று குறிப்பிட்டார்.

திருக்குறளின் பெருமையையும், தமிழ் மொழியின் தனித்த மரபையும், உயர்வையும், ஐரோப்பிய செம்மொழிகளோடு ஒப்பிட்டு உலகிற்கே எடுத்துக் காட்டினார் பேரறிஞர் அருட்தந்தை ஜி.யு.போப்.

பரந்து விரிந்த அனைத்துக் கருத்துருக்களையும் நடுநிலை தவறாமல் இருக்கிற தன்மை பெற்ற நூல் திருக்குறள் என்பதை சுட்டிக் காட்ட

**Eclecticsystem** என்ற ஆங்கில சொல்லடைவை ஜி.யு.போப் பயன்படுத்தினார்.

இதை **Epilepsy** நோய் பாதிப்பு உள்ளவர்கள் புரிந்து கொள்ள முடியாதல்லவா !

புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு , திருவருட்பயன் போன்ற தமிழ் நூல்களை பதிப்பித்தார்.

நாலாடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். திருவாசகம் சைவ நூல்களில் தனித்த தமிழ் சுவை உடையது என்பதை

“வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே“.

என்று அருட் பிரகாச வள்ளலார் பாடினார்.

மாணிக்க வாசகர் பாடியது என்ன கிருத்துவ தோத்திர பாடலா?

திருவாசகத்தை தன் மதம் மறந்து ஆங்கிலத்தில் மொழி யாக்கம் செய்து உலக அளவில் உயர்த்தியது காலனி ஆதிக்க நோக்கமா?

தமிழ் உள்ள வரை அருட் தந்தை ஜி.யு.போப் தமிழர்களின் ஊனோடு உயிரோடு கலந்து வாழ்வார்.

“அர்த்த ராத்திரியில் கொடை பிடிக்கும் அர்ப்பர்களுக்கு இந்த உயரிய தமிழ் நோக்கு புரியாது. கிண்டியில் உள்ள சிறிய காட்டில் மான் குட்டிகளோடு வலம் வரும்

**குருதி குடிக்கும் திருட்டு ஓநாய்களுக்கு திருக்குறள் மேன்மையும் போப்பின் சான்றான்மையும் தெரியாது.**

1968 ஆண்டு பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்து நடத்திய உலகத் தமிழ் மாநாட்டின் போது அன்றைய சட்டமன்ற அவைத்தலைவர் சி.பா.ஆதித்தனார் கடற்கரை சாலையில் திறந்த வைத்த கிருத்துவ தமிழ் தொண்டர் அறிஞர் அருட்தந்தை ஜி.யு. போப் சிலை.



# இந்தப் பாதுகாப்பு ஏன் அனைவருக்கும் இல்லை?

பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி

**இந்திய துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் மன்றத்தில் உரையாற்றி இருக்கிறார். இங்கே அவர் மூத்த வழக்கறிஞராக பணியாற்றியவர்.**

‘நீதிபதிகளுக்கு, நீதித்துறைக்குத் தரப்படும் கௌரவம், மரியாதை யாரும் மீறக் கூடாதது’ என்ற துணை ஜனாதிபதி, பொது வெளியில், நீதிபதிகளைத் தனிப்பட்ட முறையில் தாக்குகிற போக்கு குறித்து கவலை தெரிவித்து இருக்கிறார்.

சரியான பேச்சு. நியாயமான கவலை.

சமூக வலைதள விமர்சனங்கள் பல சமயங்களில் அநாகரிகமாக, தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாக இருக்கின்றன. ஒருவகையில் இவை தவிர்க்க முடியாதவை. இதன் பின்னால் ஒளிந்து கிடக்கிற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதிகாரம் மிக்கவர்களின் தவறுகளை சுட்டிக்காட்ட அதிகாரம் ஏதும் அற்றவர்கள் முன் வருகிற போது, அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு கிடைக்கிற போது, அவர்களின் உணர்வுகள், உணர்ச்சிகள் அவர்களின் மொழியில் தான் இருக்கும்; இருக்க முடியும். நமக்கு தெரிகிற ‘அநாகரிகம்‘, முடக்கி வைக்கப்பட்ட நியாயத்தில் இருந்து வெளிப்படுகிற முடை நாற்றம். தவறு யார் மீது?

‘சோறு துன்னாம கூட இருந்துருவேன், சினிமா பார்க்காம ஒருநா கூட இருந்ததுல்ல..’ இந்த அளவு சினிமா மோகம் தலைக்கேறிய ஒருவனுக்கும் கூட, திரைப்பட நுணுக்கம் எதுவும் தெரியாது. தெரிந்தது எல்லாம் ‘படம் நல்லாருக்கு: படம் நல்லால்ல..’

தான் மூழ்கித் திளைக்கிற சினிமா பற்றிய அறிவும் புரி தலுமே இவ்வளவுதான். இந்த நிலையில், நீதிமன்றத் தீர்ப்பு, சட்டப் பிரிவுகளின் விளக்கம், வாதங்களின் வலிமை... எந்த சாமானியனும் அறியாதது. அவனுக்கு தெரிந்தது எல்லாம்.. ‘சரி’, ‘தவறு’ இரண்டில் ஒன்று தான்.

தவறு என்று உணர்கிற போது எதிர்த்துப் பேச முடியாது சகித்துக் கொண்டு போன சாமானியர் கூட்டத்தின் பிரதிநிதிகளுக்கு, சமூக வலைதளம், சரியாய் வாய்த்த வரம்.

சமூக வலைதள விமர்சனங்களை அதன் உள்ளார்ந்த அர்த்தத்துடன் பார்த்தால் மட்டுமே, கோபத்தின் நியாயம் தெரியும்; கோபப் படுகிற அவர்களின் வலிகள் புரியும்.

நிச்சயமாக, நீதி கேட்டுப் போராடுகிற கடைசி குடிமகனின் கடைசி புகலிடமாக விளங்கும் நீதிமன்றங்களை மதித்தல், நீதிபதிகளுக்கு பாதுகாப்பு அளித்தல் நமது கடமை; நமது பொறுப்பு. அதே சமயம், பல முனைகளில் இருந்தும் தொடர்ந்து ஆபத்துகளை சந்தித்து வருகிற பல தொழில்களில், இன்னும் பலருக்கு இந்தப் பாதுகாப்பு ஏன் இல்லை?

ஆசிரியர், மருத்துவர், பத்திரிகையாளர், காவல்துறையினர், பொது நல ஊழியர் நாள்தோறும் எதிர்கொள்கிற விபரீதங்கள் கணக்கற்றவை. ஆனாலும் விடாது களப்பணி ஆற்றுகிற இவர்கள் யாருக்கும் ‘சட்டப் பாதுகாப்பு’ இல்லை. இது சரியா?

சமீப காலமாக, மாணவர் மத்தியில் நிகழ்ந்து வரும் அசாதாரண அசம்பாவிதங்கள் காரணமாக, ஆசிரியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், தொடுக்கப்படும் வழக்குகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. தவறு செய்தவன் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் ஒவ்வொரு அசம்பாவிதத்தின் போதும்,

**ஆசிரியர்கள் மீது பரவுகிற சந்தேக நிழல், ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் நிலைகுலையச் செய்கிறது. சற்றும் பாதுகாப்பற்ற நிலையில், எப்போதும் அச்ச உணர்வோடு பணிபுரிகிற அவல நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டு உள்ளனர். இவர்களில் யாருக்கும் சட்டப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு எதுவும் இல்லை.**

கொரானா பெருந்தொற்றுக்குப் பிறகு, மருத்துவமன உள்ளே புகுந்து, மருத்துவர்களைத் தாக்குகிற போக்கும் பரவலாகி வருகிறது. உயிர் காக்கிற மருத்துவர், கொடூரத் தாக்குதலில் இருந்து தப்பி, தான் உயிர் பிழைக்க ஓடுகிறார். எவ்வளவு கொடுமை இது? ‘மருத்துவர்கள், கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்‘ என்று ‘அறிவுரை’ கூறுவோர்தான் உண்டு. எங்கே இருக்கிறது பாதுகாப்பு?

உண்மைகளை வெளிக் கொண்டு வரும் முயற்சியில், பொய்களுக்கு எதிரான போரில், ‘பெரும் விலை’ தர நேர்கிற பத்திரிகையாளர்கள், பொதுநல ஊழியர்கள் எத்தனை பேர்? இவர்களின் உடைமைக்கும் உயிருக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை.

இதையெல்லாம் விடுங்கள். நீதிமன்றங்களில் கூட எத்தனை ஆபத்துகளுக்கு பிறகு ஒரு வழக்கு நீதிபதி முன்பு வருகிறது?

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் ஆய்வாளர், களப் பணியில் ஈடுபடும் விசாரணை அதிகாரி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மீண்டும் மீண்டும் மீண்டும் வாதாடும் வழக்கறிஞர், நிர்க்கதியாய் சாட்சி சொல்ல வரும் அப்பாவிகள்... இவர்களில் யாருக்கும் எந்தப் பாதுகாப்பும் எப்போதும் எங்கேயும் இல்லை. ஆனாலும், அவரவர் மனசாட்சிப்படி, அவரவரின் தொழில் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

பாதுகாப்பற்ற சூழலில், பாதுகாப்பற்ற பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்; மதிக்கப்பட வேண்டியவர்கள். இதை நாம் உணர்ந்து இருக்கிறோமா? இவர்களுக்காக என்றேனும் குரல் கொடுக்கிறோமா?

## இந்த வார தம்பிக்குறள்

### 83. உரையும் வரையும்

**வரையும் உரையும் ஒழுங்கா நெருங்கும்**
**வரையும் இருக்கும் நிலைத்து.**

ஒரு மூலப்படைப்பும், அதற்கு எழுதப்படும் உரையும் நெருங்கி பொருந்தி இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் படைக்கும் நூல் நிலைத்து இருக்கும் (ஆசிரியரின் கருத்தை திருத்தி அமைத்து விடக் கூடாது)

**நுரையைஇத் தின்றால் பசிபோகா ஆங்கே**
**நிறைநூலில் போகாப் பிழை.**

நிறைவான நூலைக்கற்றும், பிழை போகா திருப்பது, நுரையைத்தின்று பசியுடனே இருப்பது போல் ஆகும். (உவமையணி)

திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி

# பெண் பயிற்சி மருத்துவர் காயத்திரி மரணம்

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் இரங்கல்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் பயிற்சி மருத்துவராக பயிற்சியை மேற்கொண்டு வந்த டாக்டர் வி.காயத்திரி அவர்கள் மரணமுற்ற செய்தி அதிர்ச்சியை அளிக்கிறது; மிகுந்த வேதனையை தருகிறது. மருத்துவர் வி. காயத்திரிக்கு ஆழ்ந்த அஞ்சலியை சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் செலுத்துகிறது. அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் வெற்றி



திருச்சி மாநகரம் உறையூர் கடைவீதி பஸ் நிறுத்தத்தில் தமிழ்நாடு டாஸ்மாக் வாணிப கழகத்திற்கு சொந்தமான 10203, 10405, 10519 ஆகிய மூன்று மதுபான கடைகளும் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்து வருவதால், அந்த மூன்று மது கடைகளையும் நிரந்தரமாக மூட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் முற்போக்கு ஜனநாயக இயக்கங்கள் சார்பில் தொடர்ந்து பல்வேறு கட்ட எதிர்ப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மூன்று மதுக்கடைகளையும் தற்காலிகமாக மூடி உத்தரவிட்டார். இதை வரவேற்கும் விதமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஜனநாயக முற்போக்கு இயக்கங்களின் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் சிவா தலைமை வகித்தார், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இப்ராஹிம், பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி, இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் முருகேசன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் சூர்யா, மாதர் சங்க தலைவர்கள் புஷ்பம், ஆயிஷா மற்றும் மேற்கு பகுதி குழு பொருளாளர் ரவீந்திரன், அந்தநல்லூர் ஒன்றிய பொறுப்பாளர் வீரமுத்து மற்றும் மக்கள் அதிகாரம், ம.க.இ.க, விசிக, சி.பி.எம்.எல், மற்றும் ஜனநாயக முற்போக்கு இயக்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# தோழியர் ஜனகம் இஸ்மாயில் 20ஆம் ஆண்டு நினைவு நாள்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தன்னகிரில்லா தலைவர், பெண்ணுரிமை போராளி தோழியர் ஜனகம் இஸ்மாயில் 20ஆம் ஆண்டு நினைவு நாள் உறையூர் பகுதியில்ஆகஸ்ட்28 அன்று மாமன்ற முன்னாள் உறுப்பினர் வை.புஷ்பம் தலைமையில் நடைபெற்றது. 23 வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர மாவட்ட செயலாளர் சிவா, மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி துணைச் செயலாளர் முருகன் உள்ளிட்ட பலர் அலங்கரித்து வைக்கப்பட்ட ஜனகம் இஸ்மாயில் திருவுருவப்படத்திற்கு மழை தூவி மரியாதை செலுத்தினர்.

# மதுரை புறநகரில் ஜீவா பிறந்த நாளை முன்னிட்டு ஜாதி மறுப்பு திருமணம்

மதுரை புறநகர் மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், விடுதலை போராட்ட வீரர் ஜீவா பிறந்த நாளை முன்னிட்டு, சமயநல்லூர் மாரியம்மன் கோவிலில், கார்த்திக் செல்வம் – அனுசியா ஆகியோர் ஜாதி மறுப்பு திருமணம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் சுந்தரம், சோழவந்தான் ஒன்றிய செயலாளர் சுதாகர், மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தவமணி உட்பட பலர் கலந்து கொண்டனர். மேலும், சி.பி.ஐ புறநகர் மாவட்டம் சார்பில், மணமக்களுக்கு தோழர் ஜீவாவின் திருஉருவப்படம் அளித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



# நெல் கொள்முதலில் ஊழலை ஒழிக்க மேல் மட்டத்திலிருந்தே நடவடிக்கை

## ஏஐடியூசி தொழிற்சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர் சங்க மாநில நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூர் சங்க அலுவலக கூட்ட அரங்கில் சுமை சங்க மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு,தொழிலாளர்கள் சங்க மாநிலத் துணைத் தலைவர் எஸ். சிவானந்தம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்து வரும் தனியார் மயமாக்க நடவடிக்கைகள் குறித்தும்,அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட போராட்டம் குறிக்கும் விளக்கிப் பேசி,உறுதியுடன் நமது போராட்டத்தை தொடர வேண்டும் என்று பேசினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நெல் கொள்முதலில் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதையும், விவசாயிகளிடம் குறிப்பிட்ட தொகை பெறுவதையும் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.அதே நேரத்தில் ஊழல் முறைகேடுகளை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எங்கிருந்து தொடங்க வேண்டும் குறிப்பாக மேல்மட்ட உயர் அதிகாரிகள் விழிப்புக் குழு பறக்கும் படை என்று ஆய்வு செய்கின்ற அதிகாரிகளே ஊழலுக்கு வழிவகுத்து ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் ஒவ்வொரு மூட்டைக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை உயர் அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும் என்ற எழுதப்படாத ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டு வருகிறது நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்திலிருந்து இயக்கம் செய்யும் பொறுப்புள்ள அதிகாரிகள் பார்வையாளர்களாக இருந்து கொண்டு ஒரு லாரிக்கு ரூ.4000 வரை லாரி டிரைவர்கள் லஞ்சம் பெறுவது கண்முன்னே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.5000 சம்பளம் பெறுகின்ற ஊழியர்களிடம் ஆண்டுக்கு கோடிக்கணக்கில் ரெக்கவரி என்ற பெயரால் நிர்வாகம் எவ்வித விசாரணையும் செய்யாமல் இழப்புத் தொகை வசூலித்துக் கொண்டிருக்கிறது. மேற்கண்ட நடவடிக்கைகள் தான் ஊழலுக்கு அடிப்படை காரணமாக அமைந்து விடுகிறது. எனவே ஊழல் நடவடிக்கைகளை மேலிருந்து துவக்கி அதிகாரிகள் மட்டத்தில் தொடங்கி செயல்படுத்தினாலே 90% ஊழல் முறைகேடுகள் குறைவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது இதற்கு மாறாக உயர் அதிகாரிகள் கொள்முதல் பணியாளர்கள் சுமை தூக்கும் தொழிலாளர்க தலையில் சுமத்தி விட்டு தப்பித்துக் கொண்டிருக்கின்ற நிலை கண்டனத்துக்குரியது. ஊழல் முறைகேடுகளை தடுப்பதற்கான நடவடிக்கை இல்லாமல் ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கண்காணிப்பு குழு அமைக்கிறோம் புகார் பெட்டி வைக்கறோம் என்பதெல்லாம் விளம்பரத்திற்கு பயன்படும் பயனற்ற செயல்பாடுகளாக அமைந்துவிடும். கொள்முதலை முறைப்படுத்த எவ்விதத்திலும் உதவாது எனவே உயர் மட்டத்திலிருந்து ஊழல் முறைகேடுகளை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுவதுடன் ஏஐடியூசி தொழிற்சங்கம்இதற்கு முழுமையாக ஒத்துழைப்பு தரும் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தீபாவளி பண்டிகை நெருங்கி வருகின்ற நிலையில் ஆண்டுதோறும் தீபாவளி அன்றோ தீபாவளி மறுநாளோ போனஸ் வழங்குவது வழக்கமாகி கொண்டிருக்கிறது இதனை போக்க தற்போதே நடவடிக்கை மேற்கொண்டு தீபாவளி பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பே பணியாளர்களுக்கும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். 2012 ஆம் ஆண்டு வரை பணியில் சேர்ந்த கொள்முதல் பணியாளர்கள் நிரந்தரப்படுத்துவதில் மிகுந்த காலதாமதப்படுத்துகிறது உடன் இவர்களை நிரந்தர படுத்த வேண்டும் அனைத்து பணியாளர்களுக்கும்ஓய்வுபெறும்வயது60என்றுநிர்ணயம் செய்துள்ள நிலையில் கொள்முதல் பணியாளர்களுக்கு மட்டும் 58 வயது என்று செயல்படுத்துவது சிறிதும் நியாயம் இல்லை எனவே கொள்முதல் பணியாளர்கள் ஓய்வு வரும் வயதை 60 ஆக உயர்த்த வேண்டுகிறோம் தற்போதய வாழ்க்கை செலவு கல்வி தகுதி பொறுப்புகள் இவற்றை கணக்கில் கொண்டு கொள்முதல் பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 21,000 மாத சம்பளம் வழங்க வேண்டுகிறோம்.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளின் பிரச்சனைகளை தீர்த்து வைத்திடுக!

## கமிஷனரிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு பிரச்சனைகளை தீர்த்து வைக்க கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநகர கமிஷனர் பிரபாகர் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டது.

இந்த மனு கொடுக்கும் நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம் ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, ஜே.ஜேம்ஸ், மு.வ. கல்யாண சுந்தரம், மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா புருஷோத்தமன் சாந்தி சந்திரன் பிரபாக ரவீந்திரன் கே புருஷோத்தமன் என் சந்திரன் கே ரவீந்திரன் கலந்து கொண்டனர்.

மனுவில் கூறப்பட்டிருப்பதாவது, மாநகராட்சிக்கு தேவையான தூய்மை பணியாளர்கள் இல்லை. நிரந்தர தூய்மை பணியாளர்கள் நிரந்தரமாக ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை வேலைக்கு அமர்த்தியும், தினக்கூலி அடிப்படையில் வேலைக்கு அமர்த்தியும் வேலை வழங்கப்பட்டு வருகிறது.

ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தியுள்ள தினக்கூலி தொழிலாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ள தின கூலி நாள் ஒன்றுக்கு ரூ.721 என்ற அடிப்படையில் அனைவரையும் நிரந்தர பணியாளர்களாக அறிவிக்க வேண்டும்.

10 ஆண்டுகள் அதற்கு மேலும் பணிபுரிந்து வரும் அனைத்து தூய்மை பணியாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 380 ன் குப்பைகள் சேருகின்றன. இவைகளை எடுத்து செல்வதற்கு போதுமான வாகனம் இல்லை குறைவாகவே உள்ளது. தேவையான வாகன வசதிகளை மாநகராட்சி நிர்வாகம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

குப்பை அள்ளும் தூய்மை பணியாளர்களுக்கு போதுமான வண்டி வழங்குவதில்லை, பற்றாக்குறை இருந்து வருகிறது. தேவையான வண்டிகளை தூய்மை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு வார்டிலும் வண்டியை பழுது பார்ப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கோயமுத்தூர் மாநகராட்சி சுயெஸ் நிறுவனத்தோடு செய்துள்ள தண்ணீர் விநியோகம் செய்யும் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்.தற்போது நிறுவனம் சுயெஸ் குடிநீர் குழாய் பொருத்தும் பணி பல வார்டுகளில் நடைபெற்று வருகிறது. முறையாக குடிநீர் குழாய் பொருத்துவதில்லை, முறையாக பொருத்த வேண்டும்.

குடிநீர் குழாய் பொருத்தியுள்ள பகுதிகளில் மீட்டர் மாட்டப்பட்டுள்ளது. எவ்வளவு குடிநீர் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை முறையாக அறிவிப்பதில்லை. கேட்டாலும், சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகள் முறையாக பதில் சொல்வதில்லை. அலட்சியத்தோடு நடந்து கொள்கிறார்கள். குடிநீர் குழாய் பொருத்துவதற்கான கட்டணம் செலுத்திய பின்பும் மீண்டும் மக்களிடம் கூடுதல் பணம் கேட்கும் நிலை இருக்கிறது. இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

பல்வேறு தேவைகளுக்காக சாலைகள் தோண்டப்பட்டு பின்பு மூடப்படுவதில்லை. எனவே சாலைகளை உடனுக்குடன் சீர்படுத்த வேண்டும்.

திட்ட சாலைகள் அமைக்கும் பணிக்கு திட்டமிடும்போது மாமன்ற உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும்.

பாதாளம் சாக்கடை திட்டம் நிறைவேறாத பகுதிகளில் உடன் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும். பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட்ட பகுதிகளில் வீட்டு கழிவுகளை இணைக்க வேண்டும்.

மாநகராட்சி பகுதிகளில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அனுமதி வழங்கி, அப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் சீர்படுத்தப்பட வேண்டும்.

மாநகராட்சி பள்ளிகளில் இரண்டு தூய்மைப் பணியாளர்களை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்த வேண்டும்.

அம்ரூத் திட்டத்தில் தண்ணீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்ட குழிகள் உள்ள உட்புற சாலைகள் சீரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

உடனடியாக சீரமைக்கப்பட வேண்டும். குடிநீர் திட்டப் பணிகளை விரிவுபடுத்தி இணைப்புகள் வழங்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

**நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கூட்டுறவு துறை அதிகாரிகள் நியமனம்**

# அனைத்து தொழிற்சங்கத்தினர் போராட்டம்!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை தனியார் மயமாக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கூட்டுறவு துறை அதிகாரிகளை பணி நியமனம் செய்வதை கைவிட வேண்டும், சுமை பணியாளர்கள் பணியை தனியாருக்கு டெண்டர் விடக்கூடாது என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்படுகின்ற அனைத்து தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களும் கருப்பு பட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல அலுவலகத்தில் அனைத்து தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களும் கருப்பு பட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நுகர்பொருள் வாணிபக்கழக ஏ.ஐ.டி.யூ.சி. மாநில பொது செயலாளர் சி. சந்திரகுமார் தலைமை வகித்தார். இதில் மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட துணை செயலாளர் துரை.மதிவாணன், நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர் சங்கம் தயாளன் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கத்தை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஏ.ஐ.டி.யூ.சி மாநில பொது செயலாளர் சி. சந்திர குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது, கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு பல்வேறு முக்கிய மக்கள் சேவைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமே செயல்படுத்துவதற்கு திட்டமிட்டு செயலாற்றினார். நெல் கொள்முதல் பொது விநியோகம் முறையை சிறப்பாக செயல்படுத்தி இந்தியாவிலேயே முன்மாதிரி நிறுவனமாக திகழ்ந்து வருகிறது. தற்போது தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை தனியார் மயமாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக நவீன அரிசி ஆலைகள் தனியாருக்கு விடப்படுகிறது. திறந்தவெளி சேமிப்பு பணிகள் டெண்டர் விடப்பட்டுள்ளது பல ஆண்டுகளாக பணி புரிந்து வந்த சுமை தூக்கும் தொழிலாளர்களின் வேலையை பறிக்கின்ற விதத்தில் சுமை பணிகள் டெண்டர் விட்டுள்ளது. தற்போது கூட்டுறவு துறையைச்சேர்ந்த ஆறு இணைப் பதிவாளர்களை தமிழ்நாடு நுகர்பொருள் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே அனுபவம் உள்ள தகுதி உள்ளவர்கள் இருந்தும் கூட்டுறவுத் துறையில் இருந்து அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது கண்டனத்திற்குரியது. நியாய விலை கடைகளை கூட்டுறவுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனை கண்டித்து தமிழ்நாடு முழுதும் இன்று கருப்பு பேடஜ் அணிந்து எதிர்ப்பு தெரிவிக்கும் போராட்டம் நடைபெற்றது.சங்க பாகுபாடின்றி அனைத்து பணியாளர்களும் கருப்பு பட்டை அணிந்து பணிபுரிந்தனர். உடனடியாக தமிழ்நாடு அரசு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால் வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபடுவோம் என்று கூறினார்.

**“நிமிர் சுடர்” கவிதை நூல் -**

## கவிஞர் அகிலா கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டு சிறப்புரை



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் சங்கமம் அமைப்பு இணைந்து ஆகஸ்ட்21 காலை கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் “பிரபாத்கர் அரங்கில் கவிஞர் காமுவின் “நிமிர் சுடர்” கவிதை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

த.க.இ.பெருமன்றத்தின் மாநிலச் செயற்குழு உறுப்பினர், கவிஞர் அகிலா கிருஷ்ணமூர்த்தி நூலை வெளியிட்டு அதிலுள்ள கவிதைகளின் சிறப்புகளைக் குறிப்பிட்டு உரையாற்றினார்.

கவிஞர் ஒடியன் லட்சுமணன், கவிஞர் கவிஜி, எஸ்.கோட்டியப்பன், கவிஞர் நான்சி கோமகன் ஆகியோர் நூலினைப் பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் எழுத்தாளர் கே.சுப்ரமணியன் தலைமை தாங்கினார். பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி வரவேற்புரை வழங்கினார்.

இஸ்கப்மாநிலப்பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு நினைவுவ் பரிசினை வழங்கினார்.

கவிஞர் பா.மீனாட்சிசுந்தரம், கவிஞர் கவியன்பன் பாபு, எழுத்தாளர் அ.கரீம் (தமுஎசக) பேராசிரியர் த. திலிப்குமார் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக, திருமதி காமு பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளர் எல் ஜான், சங்கமம் க.ஞானகுமார் மற்றும் சிற்பக்கலைஞர் ஏ.ஜெ.செல்வின் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

# எழுத்தாளர் தெ.சுந்தரமகாலிங்கம் மறைவு

தமிழ்நாட்டின் முன்னணி எழுத்தாளர் தெ.சுந்தரமகாலிங்கம் (82) ஆக. 30 அன்று விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பில் காலமானார் என்ற துயரச் செய்தியறிந்து வேதனையடைந்தோம்.

தெ.சுந்தரமகாலிங்கம் ஆசிரியர் பணியாற்றி ஒய்வு பெற்றவர். சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் குறித்து ஏராளமான கட்டுரைகளை எழுதியவர். இவரது படைப்பில் வெளியான ‘காலத்தை வாசித்தல்’ மற்றும் ‘துரோகம் வெட்கம் அறியாது’ ஆகியவை பரந்துபட்ட வாசகர் தளத்தை பெற்றுத் திகழ்பவை. இவரது வாழ்விணையர் அமர்ஜோதி கடந்த ஆண்டு காலமாகி விட்டார். இவர்களுக்கு திலீபன், கோபிநாத், கௌதமன் என மூன்று மகன்கள் இருக்கின்றனர்.

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்**

ஜனசக்தி வார இதழுக்கு பங்களிப்பு செலுத்தி வந்த எழுத்தாளர் தெ.சுந்தரமகாலிங்கம் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாதடும் அவரது மகன்களுக்கும், குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டத் தலைவர்களில் ஒருவரும்,

ஜனசக்தியில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவருமான வாழப் பாடி சந்திரன் 30.08.2012ல் காலமானார்.

அவரது நினைவைப் போற்றும் வகையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டக்குழு உறுப்பினர் ஆத்தூர் இ.ஆர்.கே. ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கியுள்ளார்.

## திருமண நாளில் கட்சி வளர்ச்சி நிதி



தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் தோழர் டி.எம்.மூர்த்தி – அவரது துணைவியார் தோழர் ராஜேஸ்வரி இருவரும் தங்களது திருமண நாளான ஆகஸ்ட் 31 அன்று கட்சியின் தலைமையகமான பாலம் இல்லம் வருகை தந்து, கட்சி வளர்ச்சி நிதி வழங்கி வாழ்த்து பெற்று செல்வதனை வழக்கமாக பல ஆண்டுகளாக பின்பற்றி வருகின்றனர். இவ்வாண்டும் 31.08.2022 அன்று இருவரும் பாலன் இல்லம் வருகை தந்து, பாலன் இல்லத்திலிருந்த தோழர் நா.பெரியசாமியிடம் ரூபாய் பத்தாயிரம் (ரூ.10000.00) கட்சி வளர்ச்சி நிதி வழங்கிச் சென்றார். தம்பதியருக்கு வாழ்த்துகள்.

# தோழர் சி.எஸ். கட்டிட நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி தலைவர்களில் ஒருவரும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான வை.சிவபுண்ணியம் சால்வைக்கு பதில் ரூபாய் பத்தாயிரம் (ரூ.10000.00) வழங்கினார் – தோழருக்கு நன்றி – மற்ற தோழர்களும் இதனை முன்னுதாரணமாக பின்பற்றலாம். திருத்துறைப்பூண்டி நகரம் பெரிய சிங்களாந்தி தோழர் கோ.இராமலிங்கம் புதிதாக வீடு கட்டியுள்ளார். இல்லத் திறப்பு விழாவையொட்டி சி.எஸ்.கட்டிட நிதியாக ரூபாய் ஐந்தாயிரம் (ரூ.5000.00) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியச் செயலாளர் திவ்ய. பிராங்ளின் – வ.வடிவுக்கரசி திருமணம் 21.08.2022 அன்று நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., என்.பெரியசாமி (தேசியக்குழு உறுப்பினர்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கியபோது, தோழர் சி.எஸ். கட்டிட நிதிக்கு ரூபாய் ஐந்தாயிரம் (ரூ.5000.00) மணமக்கள் சார்பில் வழங்கப்பட்டது.



# இலக்கியப் பேராசான் ஜீவா பிறந்தநாள் விழா

இலக்கியப் பேராசான் ஜீவா வின் 116வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

**பரமக்குடி:** பரமக்குடியில் ஜீவாவின் பிறந்தநாள், நினைவேந்தல் கூட்டம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ந.சேகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ் மொழிக்காகவும் தமிழர் நலனுக்காகவும் வாழ்ந்து மறைந்த பொதுவுடைமை இலக்கிய பேராசான் ப.ஜீவானந்தம் வாழ்க்கை வரலாற்றை உயர்நிலை, மேல்நிலை தமிழ்பாடங்களில் பாடப்பகுதியாக சேர்க்கப்பட வேண்டுமென்று தமிழக அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில், ஏஐடியுசி மாவட்டச்செயலாளர் என்.கே. ராஜன், கலை இலக்கிய பெருமன்ற பரமக்குடி நகர செயலாளர் கே.ஆர்.,ரவீந்திரன், மாவட்டப் பொருளாளர் பெ.ராமசாமி, தொழிற்சங்க நிர்வாகிகள் கே.ஆர். சுப்பிரமணியம், ருக்மாங்கதன், போக்குவரத்து ஏஐடியூசி செயலாளர் செல்வராஜ், தெளிச்சாத்தநல்லூர் பெருமன்ற கிளை பொருளாளர் வே.சேதுராஜன், எமனேஸ்வரம் கிளை செயலாளர் பி.ஆர்.லட்சுமிநாராயணன் உள்பட பலர் கருத்துரை வழங்கினர். சமூக ஆர்வலர் அமர்நாத் நன்றி நவிலலுடன் நிறைவு பெற்றது.

**திருச்சி மாநகர் :** தில்லை நகரில் மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமையில் அலங்கரிக்கப்பட்ட ஜீவாவின் திருவுருவப்படத்திற்கு 23 வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் மலர் தூவி மரியாதை செலுத்தினார். மாநகர் மாவட்ட செயலாளர் சிவா, பகுதி துணைச் செயலாளர்கள் இப்ராஹிம், முருகன், பொருளாளர் ரவீந்திரன், பகுதி குழு உறுப்பினர்கள் ஆனந்தன், நாகராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**ஆரல்வாய்மொழி:** கன்னியாகுமரி மாவட்டம் சார்பில் 44வது ஜீவா வாகனப் பிரச்சார பயணம் ஆரல்வாய்மொழியில் இருந்து வி.அருள் குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த வாகன பிரச்சார பயணத்தை இசக்கிமுத்து துவக்கி வைத்து பேசினார்.

**செங்கம்:** திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரில் ஜீவாவின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி எம்.எஸ். மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. எஸ்.சர்தார், ஜி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ராஜா, த.மு.மு.க நிர்வாகி, இடதுசாரிசிந்தனையாளர் அப்துல் மஜீத் ஆகியோர் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**இந்திய மாணவர் சங்க மாநில மாநாட்டிற்கு**

# மாணவர் பெருமன்றம் வாழ்த்து

திருவாரூர்: இந்திய மாணவர் சங்கத்தின் தமிழ்நாடு மாநில 26வது மாநாடு கடந்த ஆகஸ்ட் 25, 26, 27 தேதிகளில் திருவாரூரில் நடைபெற்றது. 25.08.2022 அன்று நடைபெற்ற மாநாட்டுப் பேரணிக்கு மாணவர் பெருமன்றத்தின் திருவாரூர் மாவட்டக் குழுவின் சார்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வாழ்த்து தெரிவித்து முழக்கங்கள் எழுப்பபப்பட்டது. இதில், கட்சியின் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் துரை.அருள்ராஜன், மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் சு.பாலசுப்பிரமணியன், மாவட்டத் தலைவர் ஜெ.பி.வீரபாண்டியன், கட்சியின் நகர செயலாளர் செல்வம், இளைஞர் பெருமன்ற நிர்வாகி கோவி.அறிவழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பிரதிநிதிகள் மாநாடு 26.08.2022 அன்று திருவாரூர் ஏ.கே.எம். மண்டபத்தில் துவங்கியது. இதில் மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் மாநில தலைவர் மௌ.குணசேகர் கலந்துகொண்டு மாநாட்டை வாழ்த்திப் பேசினார். மேலும், மாணவர், வாலிபர் சங்க நிர்வாகிகள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்டனர்.

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

# மறியல் போராட்டம்




மு.வீரபாண்டியன் தலைமை தாங்கினார். அண்ணா தலைமை தபால் நிலையம் அருகே மறியல் போராட்டம் நடைபெற்றது. மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, தென் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா, வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி மற்றும் 53 பெண்கள் உட்பட 250க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். போலிசாருக்கும் தோழர்களுக்கு கைகலப்பு (தள்ளுமுள்ளு) ஏற்பட்டது. 157 பேர் கைதாகினர். மதியம் 2 மணிக்கு கைது செய்யப்பட்டவர்களை சந்தித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உரை நிகழ்த்தினார். மேலும் தேசியக் குழு உறுப்பினர் ந.பெரியசாமியும் பேசினார்.

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றிய, நகர குழுக்களின் சார்பில் தலைமை தபால் நிலையம் எதிரில் மறியல் போராட்டம் நடைபெற்றது. கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. போராட்டத்தினை தலைமையேற்று நடத்தினார். தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினார். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரும், மாநிலக் குழு உறுப்பினருமான அ.பாஸ்கர், கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் எம்.வையாபுரி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி.வி.சந்திரராமன், எஸ். தமயந்தி, மாவட்டக்குழு உறுப்பினர் வி.முத்துக்குமரன், எம்.மகாலிங்கம், கோ.ஜெயபால், கோ. சரவணன், தமிழ்ச்செல்வி, டி.பி.சுந்தர் நகர செயலாளர், வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தோழர்கள் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

**ஒசூர்** : ஒசூர் மாநகரம் இரயில் நிலையத்தில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் தலைமையில், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி. மகேந்திரன் முன்னிலையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான தோழர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டு திருமண மண்டபத்தில் சிறை வைக்கப்பட்டனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தலைமை தபால் அலுவலகம் முன்பு மறியல் பேராட்டம் நடைபெற்றது. மறியலில் ஈடுப்பட்ட 54 பெண்கள் உள்பட 500க்கும் மேற்பட்டவர்களை போலீசார் கைது செய்தனர். மறியல் போராட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமை வகித்தார். முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன், மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.தேவராசன், கா.சி.தமிழ்க்குமரன், எஸ்.சின்னசாமி, எம்.மாதேஸ்வரன், எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்து பேசினர். வட்டார செயலாளர்கள் பென்னாகரம் சம்பத், சின்னம்பள்ளி வெங்கடேசன், ஏரியூர் விஸ்வநாதன், பாப்பாரப்பட்டி பெருமாள், பாலக்கோடு மாதப்பன், காரிமங்கலம் , அரூர் சிற்றரசு, தீர்த்தமலை பரமசிவம், ,பாப்பிரெட்டிப்பட்டிசுப்ரமணி, நல்லம்பள்ளி பிரசாத், இண்டூர் மாது, நகர செயலாளர்கள் பென்னாகரம் விஜயபாரதி, அரூர் முருகன் மற்றும் 54 பெண்கள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் ரயில் நிலையம் முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ முன்னிலை வகித்தார். தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், தவிச சவுந்திரபாண்டி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, தலைவர் சமுத்திரம், மாதர்சங்க மாரீஸ்வரி, தவிதொச வரதராஜன், வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, இடைக்கமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், ஜீவா, நடராஜன், பலவேசம், சக்கணன், முனியசாமி, செல்வம், இராமச்சந்திரன், நகர செயலாளர்கள் விஜயன், முத்துக்குமார், ஜான்ராஜா, மூர்த்தி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக காமராஜர் சிலை முன்பிருந்து பேரணியாக புறப்பட்டு எழுச்சிமிகு கோசங்களுடன் ரயில்வே நிலையம் வந்து மறியல் செய்தனர்.

**சேலம்:** சேலம் ஸ்டேட் வங்கி முன்பு மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்தை மாநில குழு உறுப்பினர் எம்.ராமன் துவக்கி வைத்தார். மாநில குழு உறுப்பினர் க.பாரதி கோரிக்கை உரையாற்றினார். எம்.பாலன் ஏ.கந்தன் பி. ராஜேந்திரன் ஜி.ராஜா பி.அசோக்குமார் வி. ஜெயராமன், எம்.ஷனாவாஸ்கான், எஸ். முகமதுஷபி, எஸ்.எம்.மதியழகன், எஸ்.முருகன், சி.கருப்புசாமி உள்பட்ட 348 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

**தஞ்சாவூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் தஞ்சை தலைமை அஞ்சலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் மூத்த தலைவர் க.கிருஷ்ணன், ந.பாலசுப்பிரமணியன், மாநகரச் செயலாளர் ஆர்.பிரபாகரன், சி.சந்திரகுமார், பா.பாலசுந்தரம், சி.பக்கிரி சாமி, வீர மோகன், ம.விஜயலட்சுமி, வாசு.இளையராஜா, ஆர். பி.கருப்பையா, க.பூபேஷ் குப்தா, அ.எஸ்தர் செயலீமா, மு.பால்ராஜ், வ. விஜயன், கோ.அன்பழகன், க.சார்ஜ் துரை, ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட துணைச் செயலாளர் துரை. மதிவாணன், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், அரசு பண்ணைசஙக மாநில துணை தி.திருநாவுக்கரசு, இளைஞர்பெருமன்ற மாவட்ட தலைவர், மருத்துவர் ச.சுதந்திர பாரதி உள்ளிட்டார் பங்கேற்றனர்.

**ஈரோடு:** ஈரோடு தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. முன்னதாக இம்மறியல் போராட்டத்தை கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான த.ஸ்டாலின் குணசேகரன் தொடங்கி வைத்து உரையாற்றினார். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.சின்னசாமி, எம்.குணசேகரன், மாவட்டப் பொருளாளர் என்.ரமணி மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள், இடைக்கமிட்டி செயலாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில் தெப்பக்குளம் தபால் நிலையம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. தொடக்க நிகழ்வாக பேரணியை முன்னாள் மாநில குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் துவக்கி வைத்தார். நிகழ்விற்கு இடைக்கமிட்டி செயலாளர்கள் அபுதாகிர், சுரேஷ் முத்துசாமி, எம் ஆர் முருகன், ராஜலிங்கம், ஏ.அஞ்சுகம், ஏ.பால்கிருஷ்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் மாமன்ற உறுப்பினர் சுரேஷ், தரைக்கடை சங்க மாவட்ட செயலாளர் அன்சர்தீன், கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் செல்வகுமார் மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராகிம், மாதர் சங்கத் தலைவர்கள் வை.புஷ்பம், க.ஆயிஷா, இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் முருகேசன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் சூர்யா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர்** : மணப்பாறை கோவில்பட்டி சாலையில் இருந்து ஊர்வாலமாக புறப்பட்டு நகரின் முக்கிய விதி வழியாக சென்று திண்டுக்கல் சாலையில் உள்ள ஐ.ஒ.பி. வங்கி முன்பு மறியலில் ஈடுபட முயன்ற முன்னாள் மாநில நிர்வாககுழு உறுப்பினர் த.இந்திரஜித், ஒன்றியச் செயலாளர் தங்கராஜ், சி.தங்கராசு, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், நகர் மன்ற உறுப்பினர்கள் தங்கமணி, மனோன்மணி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சௌக்கத்அலி உட்பட 40பேரை காவல்துறை கைது செய்தனர். திருவெறும்பூர் ஜி.பி.டீ. முன்பு உள்ள தபால் நிலையம் முன்பு மறியலில் ஈடுபட்ட புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ் குமார், ஜீவாமன்ற செயலாளர் யூ.பக்கிரிசாமி, தாலுகா குழு உறுப்பினர்கள் கே.பழனிச்சாமி, ஜெய்குமாரி உட்பட 38 பேரை காவல்துறை கைது செய்தனர்.

துறையூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள எஸ்.பி.ஐ வங்கி முன்பு மறியலில் ஈடுபட்ட முன்னாள் மாநில குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ், ஒன்றிய செயலாளர் எஸ்.சேகர் உட்பட 90 பேரை காவல்துறை கைது செய்தனர்.

மருங்காபுரி வளநாடு கைகாட்டியில் உள்ள ஐ.ஒ.பி. வங்கி முன்பு மறியலில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளார் ஆர்.பழனிச்சாமி, ஒன்றிய செயலாளர் சி.வெள்ளக்கண்ணு உட்பட 15 பேரை காவல்துறை கைது செய்தனர்.

மண்ணச்சநல்லூர் உத்தமர் கோவில் ரயில் நிலையம் முன்பு மறியலில் ஈடுபட்ட மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.தினேஷ்குமார், ஒன்றிய செயலாளர் டி.முத்துகிருஷ்ணன், மாவட்டகுழு உறுப்பினர் டி.செல்வராஜ் உட்பட 18 பேரை காவல்துறை கைது செய்தனர்.

உப்பிலியபுரத்தில் உள்ள ஐ.ஒ.பி வங்கி முன்பு மறியலில் ஈடுபட்ட ஒன்றிய செயலாளர் வி.ஆர்.மருதை உட்பட 30 பேரை காவல்துறை கைது செய்தனர்.

தா.பேட்டை தபால் நிலையம் முன்பு மறியலில் ஈடுபட்ட மாவட்ட குழு உறுப்பினர் பி.தியாகராஜன் ஒன்றிய செயலாளர் ஆர்.கந்தசாமி உட்பட 30 பேரை காவல்துறை கைது செய்தனர்.

லால்குடியில் உள்ள ரவுண்டானாவில் மறியலில் ஈடுபட்ட தாலுகா செயலாளர் ஏ.மார்ட்டின் உள்பட 22 பேரை காவல்துறை கைது செய்தனர்.

முசிறி கைகாட்டி சாலையில் மறியலில் ஈடுபட்ட ஒன்றிய செயலாளர் வி.பி.சண்முகம் உட்பட 7பேரை காவல்துறை கைது செய்தனர்.

தொட்டியம் வாணப்பட்டரை அருகில் உள்ள எஸ்.பி.ஐ. வங்கி முன்பு மறியலில் ஈடுபட்ட வி.தொ.ச. மாவட்ட செயலாளர் பி.கணேசன் சி.பி.ஐ. ஒன்றியச் செயலாளர் பி.சதீஷ்குமார் உள்பட 20 பேரை காவல்துறை கைது செய்தனர்.

**உடுமலைப்பேட்டை**: திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை நகரில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தாலூகா செயலாளர் வி.சௌந்திரராஜன் தலைமையில் தலைமை தபால் அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்த மறியல் போராட்டத்தில் ரணதேவ், நந்தகோபால், மு.ஆறுமுகம், செல்வராஜ், ராகுல், மகேஷ்குமார், சித்ரா, ஜெயராஜ், முருகன் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் குருவம்மாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டத்தில் உழவர் சந்தையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தை தேசியக்குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி துவங்கி வைத்தார்.

**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழியில் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் தலைமையில் ஒன்றிய செயலாளர் நீதி சோழன், ஒன்றிய பொருளாளர் எஸ்.சுந்தரய்யா மற்றும் தோழர்களும், கொள்ளிடம் ஒன்றியத்தில் கே.எஸ். சிவராமன் தலைமையில் ஒன்றிய செயலாளர் ஜெய் சக்திவேல் மற்றும் தோழர்களும், மயிலாடுதுறை ஒன்றியத்தில் ஆர்.இடும்பையன், இ.வி.தொ.சா மாவட்ட செயலாளர் ஒன்றிய செயலாளர் மனோன் ராஜ், குத்தாலம் ஒன்றியத்தில் ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலாளர் ராமன் தலைமையில் எஸ்சி கணபதி மாவட்ட நிர்வாக குழு மற்றும் தோழர்களும், செம்பனார்கோயில் ஒன்றியத்தில் பி.வீரராஜ் விவசாய சங்க மாவட்ட செயலாளர், ஒன்றிய செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு அனைத்து ஒன்றியங்களிலும் மறியல் மறியல் போராட்டம் நடந்து கைது செய்யப்பட்டனர்.

**ஈரோடு வடக்கு :** பர்கூர் 200 பேர், அந்தியூர் 86 பேர், பவானி 158 பேர், கோபி 90 பேர், சத்தி 111 பேர், புளியம்பட்டி 104பேர், பவானிசாகர் 88 பேர், தாளவாடி 48 பேர், அரேப்பாளையம் 110 பேர், கடம்பூர் 106 பேர் என ஈரோடு வடக்கு மாவட்டத்தில் 10 மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் மொத்தம் 1101பேர்கள் பங்கேற்றனர்.

**ஈரோடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக்குழு சார்பில் ஈரோடு தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் மறியல் போராட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.சின்னசாமி, எம்.குணசேகரன், மாவட்டப் பொருளாளர் என்.ரமணி உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**அம்மாபேட்டை:** தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டையில் உள்ள முக்கிய வீதிகளில் ஒன்றிய செயலாளர் ஆர். செந்தில் குமார் தலைமையில் ஊர்வலமாக சென்று தலைமை தபால் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.எஸ்.பாலு, எஸ். எம்.குருமூர்த்தி, பி. தாமரைச்செல்வி,கே. ராஜாராமன்,எம். வெங்கடேசன் கோ.பழனிச்சாமி,ஆர். ரமேஷ்குமார்,எஸ். திருநாவுக்கரசு, சி. மணிகண்டன், உள்ளிட்ட பெண்கள் ஆண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்** : காஞ்சிபுரம் தேரடி காந்தி சாலையில் ஜெ.கமல நாதன் தலைமையில், வி.கே.சிவலிங்கம், தங்க ராஜ் முன்னிலையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. பேரணியை துவக்கி வைத்து மாவட்ட செயலாளர் பல்லாவரம் பா.கார்த்திக் பேசினார். மறியல் போராட்டத்தில் மாவட்ட குழு உறுப்பினர்கள் ஜா.பூபாலன், பி.வி.சீனிவாசன், கே.முனுசாமி, ஏ.மூர்த்தி, எஸ்.வி.சங்கர், ச.ராமசந்திரன், கே.ஹரிராஜன் மற்றும் 50 மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டனர்.

**நாகை:** நாகை தலைமை தபால் நிலையம் எதிரே நடை பெற்ற மறியலுக்கு நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு தலைமை வகித்தார். கட்சியின் நாகை மாவட்டச் செயலாளர் சிவகுரு.பாண்டியன்,முன்னாள் செயலாளர் எஸ்.சம்பந்தம், விவசாய சங்க மாவட்டத் தலைவர் வி.சரபோஜி, மாவட்டச் செயலாளர் ஆர்.கே.பாபுஜி, விவசாயத் தொழிலாளர் சங்கச் செயலாளர் கே.பாஸ்கர், வழக்குரைஞர் ஜி.பாண்டியன்,மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் எஸ்.மேகலா, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.கே. நாகராஜன், டி.நாராயணன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மாரி.கார்த்திகேயன் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு மறியல் செய்யும் இடத்தை அடைந்தனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடியில் பி.எஸ்.என்.எல்., அலுவலகம் முன்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் கருமன் தலைமையில், மாநகர செயலாளர் கவுன்சிலர் தனலட்சுமி முன்னிலையில் சாலை மறியல் போராட்டம் நடந்தது. மறியலில் ஈடுபட்ட 34 பெண்கள் உட்பட 64 பேரை மத்தியபாகம் போலீசார் கைது செய்தனர்.

கோவில்பட்டியில் நகர செயலாளர் சரோஜா தலைமையில் மறியலில் ஈடுபட்ட 100 பெண்கள் உட்பட 130 பேர் கைது செய்யப்பட்டனர். எட்டயபுரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் மறியல் போராட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட 24 பெண்கள் உட்பட 71பேரை போலீசார் கைது செய்தனர். ஓட்டப்பிடாரத்தில் ஒன்றிய துனைச் செயலாளர் அசோக்குமார் தலைமையில் மறியலில் ஈடுபட்ட 9 பெண்கள் உட்பட 30 பேரை போலீசார் கைது செய்தனர். இதுபோல் திருச்செந்தூரில் ஒன்றியச் செயலாளர் ஆண்டி தலைமையில் மறியலில் ஈடுபட்ட 27பேர் கைது செய்யப்பட்டனர்.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் தலைமை தபால் நிலையம் முன்பாக க.சந்தானம் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது, இதில் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், திண்டுக்கல் மாநகரச் செயலாளர் கேராஜாங்கம், ஆத்தூர் எஸ்.ராஜாமணி மாவட்ட குழு உறுப்பினர், வடமதுரை ஒன்றிய செயலாளர் பி.செல்வராஜ், நிலக்கோட்டை தாலுகா செயலாளர் ஏ.அல்லிமுத்து, நத்தம் தாலுகா செயலாளர் பி.வெள்ளைச்சாமி, வேடசந்தூர் ஒன்றிய செயலாளர் சி.எஸ்.முத்துசாமி, ஒட்டன்சத்திரம் ஒன்றிய செயலாளர் என்.சக்திவேல் உள்பட 124 பேர் மறியல் செய்து கைதாகினர்.

பழனி தலைமை தபால் நிலையம் முன்பாக ஏ.கௌசல்யா தலைமையில் மறியல் நடைபெற்றது.இதில் தொப்பம்பட்டி

தொடர்ச்சி 15ம் பக்கம் >>

>> 15ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய செயலாளர் இரா.சிவராஜ், பழனி ஒன்றிய செயலாளர் கே.தெண்டபாணி உள்பட 65 பேர் மறியல் செய்து கைதாகினர்.

**ஆண்டிபட்டி :** ஆண்டிபட்டி நகரில் ஆண்டிபட்டி ஒன்றியகுழு சார்பில் இந்தியன் வங்கி முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது. ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி தலைமை தாங்கினார் நகர செயலாளர் க.முனீஸ்வரன், ஒன்றியகுழு உறுப்பினர் டி.பெருசு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே. பரமேஸ்வரன் மறியலை துவக்கி வைத்தார்.

**நாமக்கல் :** நாமக்கல் பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நடைபெற்ற மறியலுக்கு மாவட்ட செயலாளர் கே.அன்புமணி தலைமை தாங்கினார். முன்னாள் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எஸ்.மணிவேல் துவக்கிவைத்தார்.

முன்னாள் மாவட்ட செயலாளர் ஆர்.குழந்தான் மற்றும், நாமக்கல், திருச்செங்கோடு,குமாரபாளையம்,எலச்சிபாளயம், வெண்ணந்தூர் உட்பட பல ஊர்களில் இருந்து வந்து மறியல் போராட்டத்தில் 44 பெண்கள் 107 ஆண்கள் மொத்தம் 151 , தோழர்கள் கலந்து கொண்டனர்.

**அரியலூர்** அரியலூரில் அண்ணாசிலை அருகில் இருந்து மாவட்டக்குழு உறுப்பினரும் ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளருமான த.தண்டபாணி தலைமையில், திருமானூர் ஒன்றிய செயலாளர் மு.கனகராஜ், ஜி.ஆறுமுகம், அரியலூர் ஒன்றியக் குழு எஸ்.வி.பிச்சை பிள்ளை, ஜி.மணிவேல் ஆகியோர் முன்னிலையில் ஊர்வலமாக புறப்பட்டு, தபால் நிலையம் முன்பு மறியல் நடத்திட அணிவகுத்து சென்றபோது, அரசு மேல்நிலைப் பள்ளி அருகே காவல்துறையினர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு 40க்கும் மேற்பட்டோர் கைதாகி மாலையில் விடுதலை செய்யப்பட்டனர். ஜெயங்கொண்டம், தா.பழூர் ஆகிய இடங்களில் ராஜா பெரியசாமி, சக்கரவர்த்தி ஆகியோர் தலைமையில் மறியல் நடைபெற்றது.

**நெல்லை:** நெல்லை மாவட்டத்தில் நெல்லை, அம்பை, வள்ளியூர், களக்காடு ஆகிய மையங்களில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

நெல்லை வண்ணாரப்பேட்டை பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நெல்லை மாவட்டச் செயலாளர் செ.லெட்சுமணன் தலைமையில் ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், நெல்லை மண்டலச் செயலாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன் முன்னிலையில் மறியல் நடைபெற்றது.

பாளை ஒன்றியச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், பீடி சங்க மாவட்டச் செயலாளர் கே.எஸ்.பாலு, போக்குவரத்து செயலாளர் என்.உலகநாதன், ஜனசக்தி மாவட்டப் பொறுப்பாளர் ஏ.முத்துகிருஷ்ணன் உள்பட 44 பேர் கலந்து கொண்டனர்.

இராதாபுரம் தாலுகா செயலாளர் ஏ.சேதுராமலிங்கம், என்.கலைமுருகன், என்.பன்னீர் செல்வம், ஜான்பிரைட் ஆகியோர் தலைமையில் வள்ளியூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா முன்பு மறியல் நடைபெற்றது. இதில் 23 பேர் கலந்து கொண்டனர்.

அம்பை பூக்கடை பஜார் முன்பு அம்பை – சேரை ஒன்றியச் செயலாளர் பி.முருகன், அம்பை நகரச் செயலாளர் வி.வடிவேல் ஆகியோர் தலைமையில் மறியல் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர் சிவக்குமார், பி.கண்ணன், வி.நமச்சிவாயம், பி.சபியாள் உள்பட 55 பேர் கலந்து கொண்டனர்.

களக்காடு பஜாரில் எஸ்.வி.கிருஷ்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமையில் மறியல் நடைபெற்றது. களக்காடு ஒன்றியச் செயலாளர் கே.முருகன், வி.தொ.ச. தலைவர் எஸ்.ஏ.பி. பாலன் உள்பட 16 பேர் கைதாகினர்.

**திருவண்ணாமலை :** திருவண்ணாமலையில் வழக்கறிஞர் முத்தையன் தலைமையில் 45 தோழர்களும், வந்தவாசியில் மாவட்டச்செயலாளர் தங்கராஜ் தலைமையில் 41 தோழர்களும், செங்கத்தில் பெ. அன்பு தலைமையில் 71 பேரும், செய்யாரில் ராஜேந்திரன் தலைமையில் 75 பேரும், போளூரில் வட்டச் செயலாளர் மோகன்குமார் தலைமையில் 40 தோழர்கள் என 272 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

**செங்கல்பட்டு :** செங்கல்பட்டு பேருந்து நிறுத்தத்தில் இருந்து ஊர்வலமாக சென்று இந்தியன் வங்கியின் முன்பாக எல்.மேகநாதன் தலைமையில் மறியல் நடைபெற்றது.

இதில் 130க்கும் அதிகமான தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் உரையாற்றினார்.

**மதுரை புறநகர் :** மதுரை புறநகர் மாவட்டம் அலங்காநல்லூர் கனரா வங்கி முன்பு நடைபெற்ற மறியலுக்கு புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ் ஆகியோர் தலைமை தாங்கினர். ஒன்றிய செயலாளர் குமரேசன், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட துணை செயலாளர் அலெக்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**வேலூர்:** வேலூரில் மாவட்ட செயலாளர் ஜி. லதா தலைமையில் நடந்த மறியல் நடைபெற்றது. குடியாத்தம் நகரில் நகர செயலாளர் டி. ஆனந்தன், பேரணாம்பட்டு ஒன்றிய செயலாளர் பன்னீர் தலைமையில் நடந்த மறியலை மாவட்ட மைய உறுப்பினர் துரைசெல்வம் துவக்கி வைத்தார். ராணிப்பேட்டையில் சங்கர் மேஸ்திரி தலைமையில் மறியல் நடைபெற்றது.

**திருப்பத்தூர் :** திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூரில் நகர செயலாளர் கே .முருகன் தலைமையில் மாவட்ட செயலாளர் எம். சுந்தரேசன் துவக்கி வைத்தார்.

கந்திலி ஒன்றிய செயலாளர் அண்ணாமலை தலைமையில் எம்.நந்தி துவக்கி வைத்தார். ஜோலார்பேட்டையில் ஒன்றிய செயலாளர் தீபா பூபதி தலைமையில் முன்னாள் மாவட்ட செயலாளர் ஏ .சி.சாமிக்கண்ணு துவக்கி வைத்தார்

வாணியம்பாடியில் நகர செயலாளர் ஜாகிர் உசேன் தலைமை தாங்கினார் இரா. முல்லை துவக்கி வைத்தார்.

ஆம்பூரில் எஸ்.ஆர்.தேவதாஸ் தலைமையில் நகர செயலாளர் பாரத் பிரபு துவக்கி வைத்தார்.


● ஒசூர்


● தருமபுரி


● சேலம்


● தஞ்சாவூர்


● ஈரோடு


● திண்டுக்கல்


● திருவள்ளூர்


● திருச்சி மாநகர்


● நாகை


● நாமக்கல்


● திருவண்ணாமலை


● மதுரை புறநகர்


● வேலூர்


● பர்கூர்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 03.09.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

AITUC

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கள் சம்மேளன

# 15-வது மாநில மாநாடு

## 2, 3, 4 - செப்டம்பர் 2022 - திருச்சி

### ஜி. மணி ஆச்சாரி - பி.ராமராவ் நினைவரங்கம்

### LKS மஹால்



ஜி. மணி ஆச்சாரி



பி.ராமராவ்

பொது மாநாடு: சிறப்புரை
தோழர்கள்

**இரா.முத்தரசன்**
மாநிலச் செயலாளர், CPI

**கே.சுப்பராயன்**
மாநிலத் தலைவர், AITUC

டி.ராமச்சந்திரன் MLA - க.மாரிமுத்து MLA
டி.எம்.மூர்த்தி - எம்.ஆறுமுகம் Ex.MLA
ஆர்.ஆறுமுகம் - கே.எம்.செல்வராஜ் - எஸ்.சிவா

கருத்தரங்கம்: சிறப்புரை
தோழர்கள்

கி.நடராஜன் LPF
க.அ.ராஜா ஸ்ரீதர் HMS
சி. ஸ்ரீகுமார் AIDEF
கே. ஆறுமுக நயினார் CITU
ந.க. நாராயணசாமி INTUC ஆவடி
அந்தரி தாஸ் MLF
வெ.அர்ச்சுனன் AALLF
டி. திருமலைச்சாமி TTSF
அ. மோகன் DWU
வெ.நடராஜன் AITUC

பங்கேற்கும் அமைச்சர்கள்

மாண்புமிகு **கே.என்.நேரு** (நகர்ப்புற வளர்ச்சித்துறை)

மாண்புமிகு **எஸ்.எஸ். சிவசங்கர்** (போக்குவரத்து துறை)

மாண்புமிகு **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** (பள்ளிக் கல்வித் துறை)

2 செப். மாலை வெஸ்ட்ரீ பள்ளியில் இருந்து பேரணி

3 செப். மாலை பரீக்க்ஷாவின் "பலூன்" நாடகம்

**அனைவரும் வருகைதர வரவேற்கும் சம்மேளன நிர்வாகிகள்**

எம்.நாராயண சிங் - எம்.சண்முகம் - என்.முருகராஜ் - பி.பாஸ்கரன் - என்.உலகநாதன் - எஸ்.கஜேந்திரன் - துரை.மதிவாணன் - எஸ்.சையது இப்ராஹிம் - ஏ.செல்வராஜ் - என்.கோபிநாதன் - டி.ராஜேந்திரன் - வை.மணவழகன் - இ.சுப்பையா சூரியகுமார்

**கே.சுரேஷ்** M.C.,
தலைவர்

**எம்.சுப்பிரமணியன்**
செயலாளர்

**கே.நேருதுரை**
பொருளாளர்

வரவேற்புக் குழு

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.